12th May 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 30 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




# கெய்ரோ பேச்சு தோல்வி; ஹமாஸ் கடும் தாக்குதல்

## ரபாவில் பின்வாங்கும் இஸ்ரேல், அமெரிக்கா, எகிப்து, சவூதி இரகசிய பேச்சு

(சிறப்பு நிருபர் எம்.என். முஹம்மட்)

கெய்ரோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவை அடுத்து காசா பகுதியில் மிகக்கடுமையான மோதல்கள் மூண்டுள்ளன. குறிப்பாக ஹமாஸினுடைய பிரதிநிதிகள் கெய்ரோவில் இருந்து

02ம் பக்கம்பார்க்க...

# பதவி துறந்த மைத்திரி

## தலைவராக விஜேதாச; சு.க.வில் அதிரடி மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பணிபுரிந்த முன்னாள் ஜனாதிபதியும் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற

02ம் பக்கம்பார்க்க...



# பெரும்பான்மை வாக்குகளை கவர சில கட்சிகள் முஸ்லிம்கள் மீது இனவாதம் கக்கின

## கலாநிதி ரங்க கலன்சூரிய



(அஷ்ரப் ஏ சமத்)

கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு பாரிய சோதனைகள் மிகுந்த காலமாக இருந்துவந்தது. பல்வேறு தலைப்புகளில் முஸ்லிம்களைத் இன, மத இருப்பிடங்களைத் தாக்கினார்கள். வந்துக் கொத்து, வந்த யங்கி, சாபி சாபீடன், ஹலால்

03ம் பக்கம்பார்க்க...

# முஜிபுர் ரஹ்மானைத் தவிர வேறு எவரையும் நினைத்துக் கூட பார்க்கவில்லை

## டயனாவின் வெற்றிடம் குறித்து சஜித்



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற தேசிய பட்டியலில் வெற்றிடம் ஏற்பட்ட போது அந்த இடத்திற்கு கட்சி சார்பில் நியமிப்பதற்கு தகுதி மிக்கவராக முஜிபுர் ரஹ்மான் இருந்தார்.அது பற்றி இருமுறை சிந்திக்காது அவரை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு உடனடியாக

03ம் பக்கம்பார்க்க...

# நான்கு ஆண்டுகளுக்கு குவைத் பாராளுமன்றம் இடை நிறுத்தம்

## மன்னர் அல்சபா அதிரடி அறிவிப்பு!!

குவைத்தின் எமிர் ஷேக் அல்-சபா ஜனநாயகத்தை காப்பாற்று வதற்காக

03ம் பக்கம்பார்க்க...



# முஸ்லிம் திணைக்கள புதிய பணிப்பாளராக நவாஸ்

## கிழக்கு அமைச்சுக்கு பைசல் பதவியுயர்வு

முஸ்லீம் சமய கலாசார திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக M.S.M நவாஸ்

03ம் பக்கம்பார்க்க...

# ஐ.நா.வில் பலஸ்தீனுக்கு பூரண அந்தஸ்து அமோக ஆதரவுடன் நிறைவேற்றம்



ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் பலஸ்தீனுக்கு ஐநா சபையின் பூரண அங்கத்துவம் வழங்கும் பிரேரணை 143 வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

02ம் பக்கம்பார்க்க...

# பலஸ்தீன் விவகாரம் பாராளுமன்றில் செவ்வாயன்று முழு நாள் விவாதம்

செவ்வாய்க்கிழமை இலங்கை பாராளுமன்றத்தில் பலஸ்தீன் தொடர்பான முழுநாள் விவாதம் ஒன்று இடம்பெற உள்ளது.பாலஸ்தீனில் மேற்கொள்ளப்படும்

02ம் பக்கம்பார்க்க...



# யாழ்,நாகை கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைப்பு

பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும்

02ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## யாழ்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் வரையிலான பயணிகள் படகு சேவை நாளை (13.05.2024) முதல் மீண்டும் ஆரம்பமாகவிருந்த நிலையில், நாகைக்கு வரவேண்டிய பயணிகள் கப்பல் தாமதமானதால் வரும் 17ஆந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால், யாழ்ப்பாணம் செல்லவிருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மேலும், குறித்த அறிவிப்பால் யாழ்ப்பாணம் செல்லவிருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

முன்பதிவு செய்த பயணிகள் பயண திகதியை மாற்றிக்கொள்ளலாம் அல்லது கட்டணத்தை திரும்ப பெற்று கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகைக்கு வரவேண்டிய பயணிகள் கப்பல் தாமதமானதால், வரும் 17ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

நாகையில் இருந்து இலங்கை காங்கேசந்துறைக்கு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆந் திகதி முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டது.

கேரள மாநிலம் கொச்சியில் இருந்து “செரியாபாணி“ என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதியுடன் இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீன்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அட்டூழியங்களை அம்பலப்படுத்தும் நோக்கில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பலஸ்தீன் தொடர்பான பிரேரணையை முன்மொழிய உள்ளார்.

## ஐ.நாவில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந்த வாக்கெடுப்பில் அங்கத்துவ நாடுகளின் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்த பிரேரணைக்கு எதிராக 9 வாக்குகளே அளிக்கப்பட்டன.25 நாடுகள் வாக்களிப்பதை தவிர்த்துக் கொண்டன.

இலங்கை உட்பட 77 நாடுகள் இப்பிரேரணையை கூட்டாக சமர்ப்பித்திருந்தன.

ஐக்கிய அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 9 நாடுகள் மட்டுமே பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன. பிரித்தானியா, கனடா, ஜேர்மனி என்பன வாக்களிப்பதனை தவிர்த்துக் கொண்டதோடு பிரான்ஸ், ஜப்பான், இந்தியா என்பன ஆதரவாக வாக்களித்த பிரதான நாடுகளாகும்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பலஸ்தீனுக்கு எதிராக இஸ்ரேல் பலத்த தாக்குதல்களை ஆரம்பித்து தொடரும் நிலையில் இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது. இந்தத் தாக்குதல்களினால் 40,000க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெய்ரோ...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் எந்த வகையிலும் சமாதானத்திற்கு உடன்பட மாட்டார்கள் என்ற கருத்தை முன்வைத்து கட்டாரை நோக்கி புறப்பட்டு விட்டனர்.

இதுவரை காலமும் இடையிடையே தாக்குதல் நடத்தி வந்த ஹமாஸ் இந்த பேச்சுவார்த்தையின் முடிவின் பின்னால் இஸ்ரேலிய இராணுவத்தை இலக்கு வைத்து பல இடங்களில் கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளன.

குறிப்பாக கிழக்கு ரபா பகுதியில் உள்ளே சென்ற இராணுவத்தை மீள திரும்பி வர முடியாதவாறு கடுமையான நெருக்கடியான நிலைமையை ஹமாஸ் உருவாக்கியுள்ளது .பல இடங்களில் நடைபெற்ற ஹமாஸினுடைய திட்டமிட்ட தாக்குதல்களில் அநேக இஸ்ரேலிய இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டிருப்பதோடு பலர் படுகாயமடைந்துள்ளனர்.இஸ்ரேலிய வைத்தியசாலைகளில் காயப்பட்ட இராணுவ வீரர்கள் நிரம்பி வழிவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சில காயப்பட்டவர்களை மீட்பதில் இஸ்ரேல் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றது.குறிப்பாக ஹமாஸ் தொடரான தாக்குதல்களை நடத்தி வருகின்றது.இதேவேளை இஸ்ரேல் வட காசாவிலுள்ள ஜாபாலியா நகரை ஹமாஸ் மீளவும் கைப்பற்றியதை அடுத்து அங்கிருக்கும் பொதுமக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் துண்டு பிரசுரங்கள் மூலமாக அறிவித்துள்ள நிலையில் சில பொது மக்கள் வெளியேறியுள்ளனர். ஆனால் அந்த இடங்களில் மக்களை கொலை செய்யும் வகையில் இஸ்ரேல் இடைவிடாது ஆட்லறி தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

நேற்று இரவு தொடக்கம் கடுமையான மோதல் நடைபெற்று வருவதோடு இரவு நடைபெற்ற நெருக்கமான சண்டையில் அநேக இஸ்ரேலிய படையினர் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் அங்கே அவர்களின் உடல்கள் சிதறிக்கிடப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.இஸ்ரேல் ட்ரோன்களையும் ஹெலிகளையும் உதவிக்கு அழைத்துள்ளதோடு இடைவிடாது மிகக் கடுமையான மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதேநேரம் சர்வதேச ரீதியாக பலஸ்தீனை உறுப்புரிமை பெற்ற ஒரு அங்கத்துவ நாடக ஐ நா பொதுச்சபை அங்கீகரித்துள்ள நிலையில் இஸ்ரேலுக்கு மிகவும் நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.பல நாடுகள் பலஸ்தீனை ஒரு முழுச் சுதந்திரம் பெற்ற ஒரு அரசாக அங்கீகரிக்க ஆரம்பித்திருப்பதும் ஹமாஸ ினுடைய இராணுவ ரீதியான இடைவிடாத தாக்குதலும் இஸ்ரேலை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கி இருக்கின்ற அதேவேளை வடபுறத்தில் இஸ்புல்லாக்கள் மிகக்கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றன.இஸ்புல்லாக்கள் நடத்திய தாக்குதல்களில் சில இடங்களில் பாரிய காட்டுத்தீ ஏற்பட்டு பல வீடுகளும் கட்டிடங்களும் அழிந்திருப்பதாக வட இஸ்ரேலில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னொருபக்கம் இஸ்புல்லாக்கள் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களால் வட இஸ்ரேலில் இருந்து ஆயிரக்கணக்கில் இஸ்ரேலியர்கள் வெளியேறுவதாவும் அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலினுடைய ஹஸ ாட் (hazrat ) பத்திரிகை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ரபா மீதான தாக்குதல் இராணுவ ரீதியான நோக்கம் கொண்டது அல்ல என்றும்,தெளிவாக நெதன்யாகு தன்னுடைய அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியான தாக்குதல் என வர்ணித்திருப்பதோடு இந்தத் தாக்குதல் எந்தவிதமான இராணுவ ரீதியான திட்டமிடலும் இல்லாமல் மேற்கொண்டதன் விளைவாகவே பல இழப்புக்களை இஸ்ரேலிய இராணுவம் சந்திக்க வேண்டி இருப்பதாக ஹஸாட் (hazrat ) பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய சமூகத்தில் இப்பொழுது நெதன்யாகுக்கு எதிராக பலத்த எதிர்ப்புக்கள் கிளம்ப ஆரம்பித்துள்ள அதேவேளை அமெரிக்கா இஸ்ரேலுக்கான சில உதவிகளை நிறுத்துவதாக மேலோட்டமாக கூறினாலும் அமெரிக்கா,எகிப்து அதேபோன்று சவூதி அரேபியா போன்ற நாடுகளுடன் காஸாவின் எதிர்காலம் குறித்து இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அதற்குரிய திட்டமிடல்களை மேற்கொண்டு வருவதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருக்கின்றன.






## பதவி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேன அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக்குழு கூட்டம் நேற்று கோட்டையில் இருக்கும் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற போது மைத்ரிபால சிறிசேன தலைமை பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

மைத்ரிபால சிறிசேன இடத்திற்கு அரசின் நீதி அமைச்சராக இருக்கின்ற கலாநிதி விஜயதாச ராஜபக்ச நியமிக்கப்பட்டார்.இவர் ஏகமனதாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து அரசுக்கு ஆதரவாக செயற்படும் பலரை மைத்ரிபால சிறிசேன தலைமையிலான கட்சி செயற்குழு நீக்கியதை அடுத்து கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது.மைத்ரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பதவியில் பணிபுரிய கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த 24 ஆம் திகதி தடை விதித்திருந்தது.இத்தடையை நீக்கக்கோரி கடந்த பத்தாம் திகதி மைத்ரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையிலே அவர் பதவியிலிருந்து இராஜனாமா செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற விஜயதாச ராஜபக்ச அனேகமாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நான்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்றத்தை கலைப்பதாகவும், அரசியலமைப்பின் சில பகுதிகளை 4 ஆண்டுகள் வரை இடைநிறுத்துவதாகவும் அறிவித்துள்ளார்.

குவைத் எமிர் ஷேக் மிஷ ால் அல் அகமது அல் சபா நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தை நான்கு ஆண்டுகள் வரை இடைநிறுத்துவதாக அறிவித்ததை அடுத்து மற்றொரு மத்திய கிழக்கு நாடு அரசியல் நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ளது. இதுதொடர்பாக, அமிர் ஷேக் அல்-சபா வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றில் பேசுகையில், “அரசை அழிக்க ஜனநாயகத்தை பயன்படுத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன்.ஸ்ரீ

முந்தைய ஆண்டுகளில் குவைத் அனுபவித்த ஆரோக்கியமற்ற சூழல், பெரும்பாலான அரசு வசதிகளை அடைய ஊழல் பரவுவதை ஊக்குவித்தது. துரதிர்ஷ்டவசமாக அது பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிறுவனங்களை அடைந்தது.

இது நீதி அமைப்பைக் கூட பாதித்துள்ளது. இது மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தின் சரணாலயமாகும். எந்த உரிமையும் இன்றி மக்கள் பணத்தை ஊழல் செய்தவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் தக்க தண்டனை வழங்கப்படும்” என்றார்.

# ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய கலீபாக்களுக்கான நியமனக் கடிதம் கையளிக்கும் நிகழ்வு



(பீ.எம்.முக்தார்)

இலங்கையில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஆன்மீகப் பணிகளை மேலும் செவ்வனே முன்னெடுத்துச் செல்லும் வகையில் இத்தரிக்காவின் உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய செய்கு ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸ ீ அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களினால் புதிதாக ஆறு கலீபதுஷ்ஷாதுலிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீனன்கோட்டை,பேருவளை மருதானை,தர்கா நகர் வாழைச்சேனை மற்றும் காலி ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆறு உலமாக்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.இவர்களுள் 4 பேருக்கான நியமனக் கடிதம் பேருவளை மருதானை ஷாதுலிய்யா ஸாவியாவில் நடைபெற்ற 157ஆவது வருட ஷாதுலிய்யா மனாக்கிப் தமாம் மஜ்லிஸின் போது கலீபத்துல் குலபா அஷ்ஷாதுலி மௌலவி அல்–ஹாஜ் எம்.இஸட்.முஹம்மத் ஸுஹர் (பாரி) மற்றும் சங்கைக்குரிய ஸ ாதாத்மார்களினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

மௌலவி எம்.ஐ.எம்.பாரூக் (மக்கி) பேருவளை, மௌலவி மபாஸுல் ஹுஸை ன் (பஹ்ஜி) தர்கா நகர்,மௌலவி அல்–ஹாஜ் எம்.ஜே.எம்.பஸ்லான் (அஷ்ரபி – பீ.ஏ) பேருவளை,மௌலவி அப்துல் மஜீத் (ஷர்கி) வாழைச்சேனை ஆகியோருக்கே இவ்வாறு நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டதோடு கலீபதுல் குலபாவுக்கான ஷேக் நாயத்தின் அதிகாரப்பூர்வமான கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## முஜிபுர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சிபாரிசு செய்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச உதயத்திற்கு தெரிவித்தார்.

டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உயர் நீதிமன்றம் ரத்து செய்த போது ஏற்பட்ட வெற்றிடத்திற்கு முஜிபுர் ரஹ்மானை சிபாரிசு செய்வதற்கு விசேட காரணங்கள் ஏதும் உண்டா என கேட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் கட்சிக்காக செய்த அர்ப்பணம், அவரது திறமை என்பன காரணமாக அவரை விட அந்த இடத்திற்கு நியமிப்பதற்கு வேறொருவரை நினைத்துப் பார்க்கக்கூட இல்லை என்றும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற தேசிய பட்டியல் பாராளுமனற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் சத்தியப்பிரமாணம் எடுத்து பதவி ஏற்றார்.ஒன்றரை வருடங்கள் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக முஜிபுர் ரஹ்மான் தனது பதவியை ஒன்றரை வருடங்களுக்கு முன் இராஜினாமா செய்தார்.

எனினும் அரசாங்கம் நிதி இல்லை என்ற காரணத்தை காட்டி உள்ளூராட்சி தேர்தலை தொடராக ஒத்தி போட்டதன் காரணமாக முஜிபுர் ரஹ்மானுக்கு ஏற்பட்ட அநீதியை ஈடுசெய்யப்பட்டுள்ளது.

## முஸ்லிம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நியமிக்கப்படவுள்ளார்.இலங்கை நிர்வாக சபையை சேர்ந்த இவர் தற்போது கைத்தொழில் அமைச்சில் பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றார்.

முஸ்லீம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்த பைசல் ஆப்டீன் பதவி உயர்வு பெற்று கிழக்கு மாகாண சபைக்கு போகவிருப்பதனால், ஏற்படும் வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்படவுள்ளார்.இதற்கான பிரேரணை அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## பெரும்பாண்மை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

போன்ற பல்வேறு நிகழ்ச்சி நிரலில் இதனை மேற்கொண்டார்கள். ஒவ்வொரு முறை வரும் தேர்தல் காலத்திலும் இவ்வாறுதான் இனவாதத்தைக் கக்கி பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக் கொள்வார்கள்.. அந்த விடயத்தில் முஸ்லிம் அமைதி காத்து கொள்வார்கள்.

இவ்வாறு கலாநிதி ரங்கன கலன்சூரிய தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் கடந்த 09 அன்று கொழும்பு 7 ல் உள்ள லக்ஸ்மன் கதிர்காமர் மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தேசியத் தலைவர் ஷாம் நவாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யுசவகைஉையை ஐவெநடடபைநஉெந, னுளைைகெழசஅயவழைெ னநநி கயமந யனெ னுநஅழஉசயஉல எனும் தலைப்பில் அதிதிகளின் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இங்கு கலாநிதி ரங்கன கலன்சூரிய, ஜனாதிபதி சட்டத்தரனி, எம்.எம். சுகைர், ஜனாதிபதி சட்டத்தரனி சாலிய பீரிஸ், சிரேஸ்ட சட்டத்தரனி என்.எம். .சஹீட் ஆகியோர்கள் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பக்கீர் மாக்கார், முஜிபுர் ரஹ்மான், லிபியா, பலஸ்தீன்,தூதுவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய கலாநிதி ரங்கன கலன்சூரிய தெரிவித்ததாவது,

அதே போன்று தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச காலத்தில் முஸ்லிம் கொவிட் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடம்புகளை எரித்தார்கள். இதற்கு எதிராக சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் யு டியுப்பில் ஒரு பதிவை ஏற்றியதற்காக அவரை பொலிஸார் சிறையில் அடைத்தார்கள். அவர் இன்றும் அதற்கான வழக்கில் ஆஜராகி வருகின்றார் அதே ஜனாதிபதி சிறிது காலத்திற்குப் பின்னர் எரிப்பதை தடுத்து ஜனசாக்களை அடக்கம் செய்வதற்கு தீர்மாணம் எடுத்தார். இவ்வாறானவர்கள் தான் அரகலை மக்கள் போரட்டம் ஊடாக நாட்டை விட்டு விரட்டி அடித்தார்கள் .......அந்த விடயத்தில் தற்போதைய ஜனாதிபதி 2 அரை வருடங்கள் நாட்டை விட்டு ஓடாமல் ஜனாதிபதியாக இருந்து வருகின்றார்.

இந்த நாட்டில் தேர்தல்களில் பழைய முறைப்படி பிரச்சாரத்திற்காக கொழும்புக்கு பஸ்களில் சனங்களை ஏற்றி கூட்டம் வைப்பது, போஸ்டர் அல்லது பத்திரிகை விளம்பரப்படுத்தி தேர்தல் பிரச்சாரம் செய்வதில்லை தற்போதைய டிஜிட்டல் முறையில் இந்த முறை மாற்றம் மடைந்துள்ளது.

இவற்றுக்கு உதாரணம் கடந்த காலத்தில் சிறையில் இருந்து கொண்டு பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான்

டிக் டொக் சமூக சேவை ஊடாக கோடிக்கணக்கான மக்களுக்கு தனது கருத்துக்களை அனுப்பினார். அதே போன்று தான் இந்தியாவின் பிரதமர் மோடி அவர்களும் சமூக சேவை ஊடாக தேர்தல் பிரச்சாரங்களை தேர்தலில் பிரச்சாரங்கள் மேற்கொள்கின்றார் அந்த அளவுக்கு தற்பொழுது மக்களிடம் சிறிய செய்திகள் ஒரு வசனம் கொண்ட கருத்து மட்டுமே மக்களை வெகு விரைவாக சென்றடைகின்றன அதனால் அவர்கள் மனசுகள் கவரப்பட்டு வருகின்றன.

ஆசியாவில் இந்தியா நாடு முதல் தர நாடாகவும் இந்தோனிசியா இரண்டாம் தர நாடாகவும் உலகில் முன்னேறி வருகின்றனர் இதற்காக மேலைத்தேய நாடுகள் இந் நாடுகளுக்கு எதிராக பேசவில்லை இந்தியாவின் தொழில்நுட்ப யுகத்தில் சகல நாடுகளிலும் முதலிட்டு உள்ளது. அந்நாடுகளில் அவர்கள் பாரிய பொருளாதாரத்திற்கு உந்து சக்தியாக உள்ளது - என்றார்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MAY 12 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# புதிய கல்வி முன்மொழிவுகள் இலவச கல்விக்கு வேட்டாகுமா?

1943 ஆம் ஆண்டின் இலவசக் கல்விக் கொள்கைக்கு கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ளது.

தற்போதைய இலவசக் கல்விக் கட்டமைப்பில் இருந்து வரும் கற்றல்-கற்பித்தல் போக்கை மாற்றியமைத்தல், தற்போதுள்ள கல்வி நிர்வாக முறைமையை மாற்றியமைத்தல் மற்றும் தற்போதுள்ள அரச கல்வி முறைக்கு அரசு ஒதுக்கும் நிதி ஒதுக்கீட்டை தவிர்த்துக் கொள்ளல் என்ற பிரதான மூன்று பரப்புகளில் தற்போதைய அரசாங்கம் புதிய கல்விச் சீர்திருத்தத்தை முன்வைத்துள்ளது.

இந்த சட்டக முன்மொழிவுகளின் சாராம்சம் தான் கல்வித் துறையிலிருந்துஅரசுவிலகுவதாகும்.உயர்கல்விக்கானபொறுப்பை நேரடியாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் பொறுப்பில் இருந்து விலகுவதே இதன் நோக்கப்பாடாகும். மேலும் சொல்லப் போனால் கல்வித்துறைக்கான அரச நிதி ஒதுக்கீட்டை தவிர்த்துக் கொள்ளும் போக்காகும். தற்போதுள்ள இலவச கல்வியை தனியார்மயமாக்கும் முயற்சியாகும். கல்வியையும் வியாபார மற்றும் இலாபமீட்டும் துறையாக மாற்றியமைப்பதற்கான பிரயத்தனமாகும்.

பரந்த பன்முக நோக்குகளை உள்வாங்கி வகுக்கப்பட வேண்டிய கல்விக் கொள்கை குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறி, சமூக ஏற்றத்தாழ்வுகளை தோற்றுவிக்கும், வெறுமனே வியாபார முயற்சியாண்மையாக மாற்றும் இந்த பிரயத்தனத்தை இலங்கை ஓர் வங்குரோத்து நாடாக தோற்றகடிக்க வேண்டும்.

தொன்னாசியாவில் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் இலங்கை, இத்தகைய தீர்மானங்களுக்கு வருவது யதார்த்தங்களை புரிந்து கொள்ளாத ஆட்சியாளர்களின் ஒரு தலைபட்ச போக்கையே சுட்டுகிறது.

கடந்த காலங்களிலும் கூட இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு திறைசேரியில் இருந்து ஒதுக்க வேண்டிய ஊதியத் தொகையை ஆறு மாதங்களுக்கும் மேலாக ஒதுக்காதிருந்தனர்.

நாட்டின் கல்லவிக் கொள்கை பொது நலனை அடிப்படையாக்க் கொண்டு அமைய வேண்டும். அதனை எவ்வித்த்திலும் ஒருபோதும் இதனை குறைமதிப்பிற்குட்படுத்த கூடாது. இது நாட்டின் சமூக ஜனநாயக பாதுகாப்பை கேள்விக்குறியாக்குறது. குடிமக்களின் கல்வி உரிமையை ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் இந்தனோஷிய மற்றும் பூட்டான் போன்ற எமது பிராந்திய நாடுகள், அந்நாட்டின் இலவசக் கல்விக் கட்டமைப்பில் புதிய டிஜிடல் மாற்றங்களை ஏற்படுத்த கடந்த மூன்று வருடங்களாக அரச நிதியை மேலதிகமாக ஒதுக்கி வரும் நிலையில், நாம் இலவசக் கல்வியை பலப்படுத்துவதை விடுத்து வியாபார முயற்சியாக்குவதால் விளையும் பயன் என்ன ?

நாட்டின் புதிய அரச கணக்கெடுப்பே ஏழ்மையடந்தோர் எண்ணிக்கை 70 மூ ஆக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள நிலையில் இலவசக் கல்வியை தனியார்மயமாக்க எடுக்கும் முயற்சி எதனை அடைவாக பெற நோக்கிறது என்பதை வரையறுப்பதில் பலத்த கேள்விகளை தொடுத்து நிற்கிறது.

# அகவை எண்பதில் வேதாந்தி

முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் ஸ்தாபகச் செயலாளருமான வேதாந்தி சேகு இஸ்ஸதீன் நேற்று 80வது வயதை அடைந்தார்.அக்கறைபற்றை சேர்ந்த பிரபல இலக்கியவாதியும் சிறந்த பேச்சாளருமான இவர் இப்போது தீவிர அரசியலிலிருந்து ஒய்வு பெற்றுள்ளார்.

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய இணையத்தளம் அங்குராப்பணம் செய்துவைப்பு



(இக்பால் அலி, அஷ்ரப் ஏ சமட்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் (10) வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரம நாயக்க பிரதம அதிதியாக கலந்து உத்தியோகபூர்வமாக இணைய தளதினை அங்குரார்பணம் செய்து ஆரம்பித்து வைத்தார்கள்.

புத்தசாசன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரம நாயக்க அவர்களின் தலைமையில் அவரின் கையினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட மேற்படி நிகழ்வில், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். எம்.எம்.முஸாரப், ஹஜ் மற்றும் உம்ரா குழுத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களும், வகுப் சபை உறுப்பினர்கள், ஹிந்து, கிறிஸ்தவ



சமய திணைக்கள உத்தியோகத்தர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நீண்ட காலத் தேவையாக காணப்பட்ட இந்த இணையத்தளத்தை முஸ்லிம் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல் அவர்களின் முயற்சியினால் உருவாக்க முடிந்ததுடன் உதவிப் பணிப்பாளர்களான எம்.எஸ். அலா அஹமட், என். நிலுபர், கணக்காளர் நிப்றாஸ் ஆகியோரும் இதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள்.

இந்தப் புதிய இணையதளத்தின் மூலமாக பள்ளிவாசல்கள், ஸியாரங்கள், அரபுக் கல்லூரிகள், குர்ஆன் மத்ரஸாக்கள், அஹதிய்யா பாடசாலைகள் ஹஜ், உம்ரா, வீசா சம்பந்தமான தகவல்கள் மற்றும் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

அமைச்சின் கீழுள்ள அனைத்து திணைக்களத்தையும் கணினி மயப்படுத்தி நவீனமயப்படுத்த வேண்டும் என்ற அமைச்சர் விதுர விக்ரம நாயக்கவின் எண்ணக்கருவின் அடிப்படையில் இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்புதிய இணையதளத்தைப் பார்வையிட கீழுள்ள லிங்கை அழுத்துவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

www.muslimaffairs.gov.lk.



# உச்சி வெயிலின் உஷ்ணத்தை சமாளிப்பது எப்படி?

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்குகிறார் ஏறாவூர் ஆதார வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில்

( ஐ.ஏ. காதிர் கான் )

"தற்காலத்தில் அனைவரும் எதிர்நோக்கியுள்ள ஒரு பாரிய பிரச்சினையாக, கோடை வெயிலின் கொடூரத்தைக் குறிப்பிடலாம். வழமைக்கு மாற்றமாக சூழலில் கடும் வெப்ப நிலை மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. ஆடைகள் நனைந்து வியர்வையில் குளித்துக் கொண்டிருக்கின்றோம். அனல் காற்றை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அதிக வெக்கை காரணமாக, மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளனர். பகல் வேளைகளில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத அளவிற்கு வெயிலும், இரவு வேளைகளில் வீட்டுக்குள் இருக்கவே முடியாத அளவிற்கு புழுக்கமும் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் அம்மை, கண் வருத்தம், உடலில் நீரிழப்பு, முதுகுப் புறத்தில் சூட்டுக் கொப்புளங்கள், வியர்க்குரு, சிறு நீர்த் தொற்று, பொடுகுத் தொல்லை, வலிகளுடன் கூடிய முகப்பரு, அதிகமான கண் எரிச்சல், தூக்கமின்மை, உடல் எரிச்சல், வாய்ப்புண் வருதல், அரிப்பு, தேமல், சிறு நீரகக் கற்கள் போன்ற உபாதைகளின் காரணங்களினால் அவஸ்தைக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலைமைகளைச் சமாளித்து வாழ்க்கையை சுமூகமாக மாற்றி அமைக்க, எவ்வாறான எளிய வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்".

இயற்கையின் தாக்கத்தில் இருந்து நம்மை நாமே தற்காத்துக் கொள்வது சாலச்சிறந்தது.

"எமது உடல் சுமார் 75 வீதம் நீர்த் தன்மையால் ஆக்கப்பட்டுள்ளது. நீரை உட்கொள்ளாவிட்டால், நாம் உயிர் வாழ்வது கடினம். மனித உடலின் சராசரி வெப்ப நிலை 37 டிகிரி செல்சியஸ் (36.1[illegible]37.0) ஆகும். சுற்றுப்புற வெப்ப நிலை, சராசரி வெப்ப நிலையை விட அதிகமாகும் போது வியர்வை மற்றும் தோலுக்கு அதிக இரத்த ஓட்டம் செல்வதன் மூலம் அதிகப்படியான வெப்பம் வெளியேறி, உடல் சராசரி வெப்ப நிலையை அடைகிறது.

கோடை வெயிலால் அதிக வியர்வை வெளியேறும் போது, உப்புச் சத்துப் பற்றாக் குறையும் நீர்ச்சத்துப் பற்றாக் குறையும் ஏற்படுகின்றன. இதனால், அதிக தாகம், தலை வலி, உடல் சோர்வு, தலை சுற்றல், தசைப் பிடிப்பு, குறைந்த அளவு சிறு நீர் , செறிவான கடும் மஞ்சள் நிற சிறு நீர் வெளியேற்றம், மயக்கம், வலிப்பு போன்றவை ஏற்படலாம்.

கோடை காலங்களில் ஏற்படும் நீரிழப்பானது (னநாலனசயவழைெ), இலகுவாகக் குணமடையச் செய்யக்கூடியது. ஆனால், அதைத் தீர்க்காது போய்விடின் உயிரிழப்புக்கள் கூட சம்பவிக்கலாம். எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில், மக்கள் அதி கூடிய கவனம் எடுத்து, தமது உடம்பில் நீர்த்தன்மையைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

01) போதுமான அளவு குளிர்ந்த நீரையே இயன்றளவு அருந்திக் கொள்வது. சூடான நீராகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. நீரின் அளவு குறைவதைத் தவிர்க்க, தினமும் 4 முதல் 5 லீற்றர் வரை சுத்தமான குடி நீரைப் பருகுவது.

02) கோடை காலங்களில் பரவலாக விற்கப்படும் நீர்ச்சத்து மிக்க பழங்களை அடிக்கடி சாப்பிடுதல்.

உதாரணமாக,

வத்தகைப் பழம், வெள்ளரிப் பழம், நுங்கு, இள நீர், இயற்கையான பானங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

03) மக்கள் அதிக நேரம் வெயிலில் சுற்றுவதைத் தவிர்த்தல் நல்லது. நண்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரையிலான காலத்தில் கடும் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்ப்பது மிக அவசியமாகும்.

04) இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து பருத்தியில் (கொட்டன்) நெய்யப்பட்ட உடைகளைத் தளர்வாக அணிவது. அடர்த்தியான நிறங்களைத் தவிர்த்து மெல்லிய நிறங்களிலான ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது சிறந்தது.

05) வெயிலில் வெளியே செல்பவர்கள் முகம், கை, கழுத்து போன்ற பகுதிகளில் கிரீம் (வெயில் பாதுகாப்புக்கான கிரீம்) பூசிவிட்டு வெளியே செல்வது. இது தவிர, தொப்பி, கூலிங்கிளாஸ் போன்றவற்றை அணிந்து கொள்வதும் நல்லது.

06) தினமும் இரண்டு அல்லது மூன்று முறை தூய்மையான நீரில் குளிப்பது.

07) வீட்டு வாசல்களையும் யன்னல்களையும் திறந்து வைத்து காற்றோட்டமான சூழலை ஏற்படுத்துவது.

08) குளிரூட்டப்பட்ட அறைகளில் அதிக நேரம் இருப்பவர்கள், காலை அல்லது மாலை வேளைகளில் வெயில் இல்லாத நேரத்தில் அரை மணி நேரம் நடைப் பயிற்சி மேற்கொள்ளுவது.

09) அதிக உடல் உழைப்பு அதிக உடற் பயிற்சி போன்றவற்றை கோடை காலத்தில் தவிர்த்துக் கொள்வது நல்லது.

10) மதுபானம் அருந்துவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. இது உடலில் இருந்து நீர் இழப்பை அதிகரிக்கச் செய்து, சிலவேளை பக்கவாத நிலைமையைக்கூட உருவாக்கும்.

11) வெப்ப அலையின் தாக்கத்தால் ஏற்படும் தலைச் சுற்றல், வாந்தி, குமட்டல், உடல் சோர்வு, பலவீனம், மயக்கம், அதிக அளவு தாகம், தலை வலி, கால், மணிக்கட்டு அல்லது அடி வயிற்றில் வலி ஏற்பட்டால் அவற்றை அலட்சியப்படுத்தாமல் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மிக முக்கியமாகும். இவை யாவும் உடலின் நீரிழப்பிற்கான எச்சரிக்கை அறிகுறிகள் ஆகும்.

12) வெயில் காலத்தில் மொட்டை மாடி கொங்கிரீட் தளங்கள் போன்றவற்றில் அதிக நேரத்தை செலவிடுவது. ஏனெனில், இவை அத்தனையும் சூரிய வெப்பத்தை அதிகம் பிரதிபலித்து, உடம்பிலிருந்து நீரிழப்பை அதிகளவில் ஏற்படுத்தி விடக் கூடும்.

13) வெயில் படக்கூடிய இடத்தில் காணப்படும் உலோகப் பொருட்களை, கைகளால் தொடாமல் இருப்பது. அவை அதிக வெப்பமடைந்து, தீக்காயங்களை உண்டாக்கும் அபாய நிலைமைகளை ஏற்படுத்தும்.

14) கொழுப்பு அதிகம் உள்ள உணவுகள் மற்றும் இலகுவாக செரிமானம் ஆகாத உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது.

ஆகவே, இதுபோன்று தற்காப்பு



முறைகளைக் கடைப்பிடித்து, இந்தக் கோடை வெயிலின் அதி தாக்கத்திலிருந்து சிறிதளவேனும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள நாம் முயற்சிப்போம்" என்றும் டாக்டர் ஜலீலா முஸம்மில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சமூக சேவையாளர் பஸீர் லத்தீப் காலமானார்



கொழும்பு 02 வேகந்தை ஜு/ம்ஆ மஸ்ஜித் நிருவாக சபைத் தலைவர் அல்ஹாஜ் பஸீர் லத்தீப் அவர்கள் வபாத்தானார்கள். அன்னாரின் ஜனாஸ ா வேகந்தை ஜு/ம்ஆ மஸ்ஜித்தில் வைக்கப்பட்டு ஜனாஸா நேற்று அஸ ர் தொழுகையின் பின்னர் ஜாவத்தை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் பெருந்திரளனவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

எல்லோருடனும் இன்முகத்துடன் உறவாடும் இவர் வேக்கந்தை பள்ளிவாசலில் நீண்ட காலம் சேவையாற்றி பல்வேறு உதவிகளை செய்து வந்த ஒரு சிறந்த தலைவராக இவர் காணப்பட்டார். திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதே இவர் காலமானார். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு இவரது ஒரேயொரு புதல்வரும் திடீரென மரணமானதில் இருந்து சற்று மன வேதனையுடன் இருந்த நிலையில் இவரும் காலமானது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## வரகாபொலையில் சுகாதார பயிற்சி பட்டறை





(பாரா தாஹீர்)

ஆஸாத் மற்றும் HROPA, SUNPA ஆகியன ஜனாதிபதி அலுவலகம் மற்றும் துறை சார்ந்த அமைச்சு அதிகாரிகளுடன் கூட்டிணைந்து, வறுமை ஒழிப்பு போஷாக்கு மற்றும் சுகாதாரம் தொடர்பான பயிற்சி பட்டறை ஒன்றை வரகாபொல சுகாதார அலுவலக அதிகாரி காரியாலயத்தில் அண்மையில் நடத்தியது.

இதில் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம். எம். மூசீன், திருமதி இந்திராணி,சுகாதார துறை அதிகாரிகளான உபாலி ரணசிங்க,திரு ராஜபக்ஷ, இதன் தலைவர் எம். என்.எம். ஸாதிக்,செயலாளர் எம்.ஜே. நஸ்ரினா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.








நாச்சியாதீவு பர்வீன்

# வாசிப்பின் நேசத்தில்.... ஒரு பெண் பிள்ளை

நூலாசிரியர்: சமுத்ரிகா த சில்வா
மொழிபெயர்ப்பாளர் : ஹாபிஸ் இஸ்ஸதீன்

-மக்கொனையூரான்-

வளந்தவர்களின் சிறுவர் கதை என அடையாளப்படுத்தப் பட்டிருக்கும் இந்நூல் 16 தலைப்புக்களில் நூலாசிரியரின் இளமைக்கால வாழ்வை அழகாய் எடுத்துக்காட்டுகின்றது.

இன்றைய நவீன யுகத்தில் இளைய தலைமுறையினர் அனுபவித்திராத இன்பங்களை இந்நூலின் ஒவ்வொரு வரியிலும் கண்டு கொள்ளலாம்.

வெறும் புத்தகப் படிப்பு ஒரு சிறிய பிள்ளைக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை என்பதையும். ஒவ்வொரு விடயத்தையும் அனுபவத்தினூடாக விளங்கிக் கொள்ளவே இளைய பருவம் ஆவல் கொள்கின்றது என்பதனையும் நூலாசிரியர் அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நூலாசிரியர் எம்மோடு நேரடியாக உரையாடுவது போன்று கதை நகர்கின்றது. பெரும்பாலான சம்பவங்கள் எனது இளமைக் காலத்தோடு ஒத்துப் போவதால் இரசித்து அதில் மனம் இலயித்து வாசித்து மகிழ்ந்தேன். ”மழையும் துறைமுகமும்” என்னை மிகவும் கவர்ந்தது. மழை நீரில் குளித்து விளையாடிய இளமைக் காலம் நெஞ்சுக்குள் மழையைப் பொழிவித்தது. இந்த இன்பங்கள் இன்றைய சிறார்களுக்கு இல்லாதிருப்பது எவ்வளவு துரதிஷ்டம்.

“வெசாக்கூடு” எனும் தலைப்பில் கீழ்வரும் வசனம் அழகானது..




...அப்பாவித்தனமானது...

“நீங்கள் வெசக்கூட்டில் தடவுவதை விடக் கூடுதலாகப் பசை தடவி இருப்பது வேறு இடங்களில்தான். பசையில் பாதி வீணாகி இருக்கிறது.கோதுமை மாவை வீணாக்கி விட்டீர்கள்!” என அப்பா கூறினார்.

நித்தமும் எங்கள் மீது சாட்டப்படும் “வீணாக்குதல்“ என்ற குற்றச்சாட்டு இங்கும் பயன்டுத்தப்பட்டது. சத்தியமாக வெசக்கூடு ஒட்டுவதற்காகாகப் பசையைப் பயன்படுத்தியது நான் மட்டும்தான். வெசக் கூட்டில் தவிர வேறு எங்கேயும் நான் பசையைத் தடவவில்லை. ஏனைய இடங்களில் பசை தடவப்பட்டது எவ்வாறு என்பது இன்றும் எனக்கு வியப்பாகவே இருக்கின்றது.

இப்படியாக ஒவ்வொரு நிகழ்வும் சுவாரசியம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. ஓர் அழகிய வாசிப்பனுவத்தைத் தந்தது இந்நூல்.

மூலமொழியிலிருந்து சிறிதும் கருத்துத் திரிபுறாமல் தனது மொழிபெயர்ப்புப் பணியை செவ்வனே நிறைவேற்றியிருக்கிறார் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்கள்.

வாசிக்கும் போது அலுப்பு ஏற்படாத வகையில் எளிய வசனநடையிலும் , காட்சிகளை அப்படியே கண்முன்னே காட்டுவது போலவும் வெகு சிறப்பாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது.

பல்வகைமிக்க பிள்ளைப் பருவமே தனது வெற்றிக்குக் காரணம் என்பதைப் பின்னட்டையில் நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

வளர்ந்துவிட்ட பின்னர் மீட்டிப் பார்க்க ஏராளம் விடயங்கள் நிறைந்துள்ள அன்றைய பிள்ளைப் பருவம் எவ்வளவு அற்புதமானது.

ஆனால் இலத்திரனியல் ஊடகங்களுடன் தமது காலத்தைக் கழிக்கும் இன்றைய பிள்ளைப் பருவத்தினர் வளர்ந்த பின்னர் எதைத்தான் மீட்டிப் பார்ப்பார் என்று யோசிக்கிறேன்.

“ஒரு பெண்பிள்ளை” மூலம் அழகிய பசுமையான நினைவுகளை மீட்டிடக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி. நூலாசிரியருக்கும் மொழிபெயர்ப்புச் செய்த ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்.



# இலங்கைப் பயணம் - சந்திப்பு

-அ.ராமசாமி-

இலங்கையின் கொடகே விருதுக்குரிய நாவல்களின் குறும்பட்டியலில் இடம்பெற்ற கட்டுபொல் (2027) நாவலை வாசிக்கச் சொன்னவர் அப்துல் ஹக் லறீனா. இதுதான் பிரமிளா பிரதீபனின் எழுத்துகளில் வாசித்த முதல் புனைகதை. சிங்களத்திலிருந்தும் ஆங்கிலத்திலிருந்தும் மொழிபெயர்ப்பு செய்யும் லறீனா, சப்ரகமுவ பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். இலங்கையின் இலக்கியவிருதுத் தேர்வுக்குழுக்களில் இடம்பெறக்கூடியவர்.

நாவலை பிடிஎப் வடிவில் பிரமிளாவை அனுப்பச் சொன்னவரும் அவர்தான். கட்டுப்பொல் நாவல் வடிவரீதியாகப் போதாமைகள் கொண்டதாக இருந்தது. அதன் மீதான எனது வாசிப்புக் குறிப்புகளின் தொடர்ச்சியில் அவரது கதைகள் பலவற்றிற்கு முதல் வாசகனாக இருந்துள்ளேன். இலங்கையில் வெளிவரும் அச்சிதழ்களிலும் தமிழ்நாட்டின் இணைய இதழ்களிலும் அவர் எழுதும் கதைகள் குறித்து அவ்வப்போது விமரிசனக்குறிப்புகள் எழுதியதின் தொடர்ச்சியில் அவரது சிறுகதைத் தொகுதியொன்றை ‘யாவரும் பதிப்பகம்’ (2022) இல் வெளியிட்டது. அதற்கு என்னுடைய முன்னுரை வேண்டுமெனக் கேட்டபோது நல்ல கதைகள் எழுதும் ஒருவரின் தொகுப்புக்கு முன்னுரை எழுதுவதற்குத் தயக்கமில்லை என்று சொல்லி எழுதிக்கொடுத்தேன். அத்தொகுப்புக்குப் பின்னரும் கதைகள் எழுதுகிறார். நாவல் எழுதும்படி சொன்னபோது தனது வேலைப்பளுவைக் காரணமாகச் சொல்லித் தள்ளிப்போட்டிருப்பதாகச் சொன்னார். கல்விப் புலத்தில் ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் இருக்கிறார். மலையக வாழ்வியல் பின்னணியைக்கொண்ட பிரமிளா இலங்கைத் தமிழ்ப் புனைகதைக்கு/ சிறுகதைக்குப் பன்முகத்தன்மை கொண்ட கதைத் தொகுதியொன்றை வழங்கியவர்.

2019 இல் இலங்கை போனபோது தங்கியிருந்த கொழும்பு தமிழ்ச்சங்கத்திற்கு வந்து பேசிவிட்டுப் போனார். இந்தமுறையும் அங்குதான் தங்கினேன். அங்கிருந்து கட்டுநாயக விமான நிலையத்திற்குப் போவதைவிடத் தங்கள் வீட்டிலிருந்து போவது நேரம் குறைவு எனச் சொல்லிக் காலை உணவுக்கு அழைத்துப்போனார்கள் அவரது கணவர் பிரதீபனும் மகன் சந்தோஷம். அவர்கள் வீடிருக்கும் வத்தளைக்குக் காரில் போகும்போது சந்தோஷ் கொழும்பு நகரத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போனார். போனமுறை வந்தபோது சிறுவனாக இருந்தவர் இப்போது பள்ளிப்படிப்பின் கடைசியில் இருக்கிறார்.

காலை உணவுக்குப்பின் மகிழ்ச்சியோடு அந்தக் குடும்பத்தோடு உரையாடிக் கொண்டிருந்தபோது விரைவில் நாவல் எழுதவேண்டும் என வலியுறுத்தி விட்டு வந்திருக்கிறேன். ஒரு உற்சாகமான வேண்டுகோள் தூண்டுதலாக அமையும் என்ற நம்பிக்கையில்...

# அமானா வங்கியின் சித்தீக் அக்பர்; AAFI இன் தலைவராக நியமனம்

அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், மாற்று நிதிச் சேவை நிறுவனங்களின் சம்மேளனத்தின் (AAFI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையை அமானா வங்கி கௌரவித்துள்ளது. வட்டிசாராத இஸ்லாமிய வங்கிகள் பிரிவில் சித்தீக் கொண்டுள்ள தலைமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல்கள் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் எனும் நிலையில் அமானா வங்கியுடன் சித்தீக் இணைந்து கொண்டதுடன், பின்னர் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவராக அவர் பதவி உயர்வு பெற்றிருந்தார். அமானா வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு முன்னதாக, நிதி, தொலைத்தொடர்பாடல் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் போன்ற துறைகளில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் மற்றும் வர்த்தக நாம முகாமையாளர் எனும் பதவிகளை இவர் வகித்துள்ளார். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் பொருளாளராகவும் சித்தீக் செயலாற்றியுள்ளார்.

தொழிற்துறையில் அமானா வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி, பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல் அமர்வுகளில் பிரதான வளவாளராக சித்தீக் உரையாற்றியுள்ளதுடன், தொழிற்துறையினுள் தமது நிபுணத்துவ அறிவுக்காக நன்மதிப்பையும் பெற்றுள்ளார். 2015 இல் யுயுகுஐ அறிமுக அமர்வின் உப தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். OrphanCare நம்பிக்கை நிதியத்தை நிறுவுவதிலும் இவர் முக்கிய பங்காற்றியிருந்ததுடன், முகாமைத்துவ அங்கத்தவராக அவர் செயலாற்றுவதுடன், இளம் வயதுவந்த அநாதரவானவர்களுக்கு இரண்டாவது கைவிடப்படலை தவிர்ப்பதற்கு ஆதரவளிக்கின்றார்.

2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட AAFI இல் தொழிற்துறையைச் சேர்ந்த சகல பிரதான வங்கிகளும், நிதிச் சேவை நிறுவனங்களும் அங்கம் பெற்றுள்ளன. வட்டிசாராத பங்குபற்றல் வங்கியியல் மற்றும் நிதியியல் தொழிற்துறையை முன்னேற்றுவதற்கு, AAFI இனால் சகல இலங்கையர்களுக்கும் தேசத்துக்கும் பெருமளவு அனுகூலங்கள் வழங்கப்படுவதுடன், இந்த முன்னேற்றகரமான நிதியியல் மற்றும் வங்கியியல் மாதிரியை தூர நோக்குடைய ஈடுபாட்டுடன் மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றன.

தமது நியமனம் தொடர்பில் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், “மாற்று நிதிச் சேவை நிறுவனங்களின் சம்மேளனத்தின் (AAFI) தலைவராக பணியாற்றுவதற்கு கிடைத்த இந்த வாய்ப்பை எண்ணி நான் மிகவும் பெருமை கொள்கின்றேன். இந்த பிரத்தியேகமான வங்கியியல் மற்றும் நிதியியல் வளர்ச்சி தொடர்பான ஒருமைப்பாடு மற்றும் கூட்டுறவை கட்டியெழுப்புவதில் எமது மாற்று வங்கியியல் சமூகம் தமது ஒன்றிணைந்த அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளது. இந்தக் குழுவினருடனும், தொழிற்துறையுடனும் இணைந்து துறைசார் சவால்களுக்கு முகங்கொடுப்பது, அறிவுப் பகிர்வை ஊக்குவிப்பது மற்றும் அனைத்து இலங்கையர்கள் மத்தியிலும் வட்டிசாராத வங்கியியல் மாதிரியை அனுபவிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் செயலாற்றுவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். எனது அறிவு, நிபுணத்துவம் மற்றும் தொழிற்துறையில் வெளிப்பாட்டை



மேம்படுத்திக் கொள்ள அமானா வங்கி எனக்கு வழங்கியிருந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.” என்றார்.

AAFI இன் தலைவராக சித்தீக் இயங்குவதற்கு மேலதிகமாக, அதன் உப தலைவராக சுரேஷ் பெரேரா (KPMG), செயலாளராக ரிப்கா சியார்ட் (KPMG) மற்றும் பொருளாளராக பஹார் நயன் (KPMG) ஆகியோர் அங்கம் பெறுகின்றனர். இந்த சம்மேளனத்தின் இதர அங்கத்தவர்களாக உப பொருளாளராக ஹிஷாம் அலி (ஹற்றன் நஷனல் வங்கி) மற்றும் உப செயலாளராக இல்சாம் அவ்பர் (LOFC) ஆகியோர் காணப்படுகின்றனர். சம்மேளனத்தின் ஸ்தாபக தலைவர் மறைந்த ரவி அபேசூரிய ஆவார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# உத்தியோகபூர்வ விவகாரங்களில் முத்திரை பயன்படுத்தும் நடைமுறை நீக்கப்பட வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



மஹரகம, பிரகதிபுரவில் இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி வழங்கும் திட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

இன்று ஆரம்பிக்கப்படும் இந்த மானியத் திட்டத்தினூடாக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பல்வேறு பிரச்சினைகளால் அவதியுறும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும், பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாங்கள் மிகவும் கடினமான ஒரு காலத்தை கடந்து வந்துள்ளோம். சில வீடுகளில் மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்ள வெகுதூரம் செல்ல வேண்டியிருந்தது. அந்த நாட்களையும் வாரங்களையும் மிகுந்த சிரமத்துடன் கழித்த பின்னர் அரசாங்கம் என்ற வகையில் எங்களால் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது.

அந்தச் சுமையை முதலில் தாங்கியவர்கள் விவசாயிகளை. அந்தச் சுமையை விவசாயிகள் சுமந்ததால் இலங்கைக்கு மேலதிக அறுவடை கிடைத்ததோடு உணவில் தன்னிறைவு அடைய முடிந்ததை நாம் உணர்கிறோம்.

முதலில் எமது நாட்டில் விளையும் அரிசியை எமது நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்க மாவட்ட செயலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சொந்தக் காலில் நிற்கக் கூடிய நாடாகவும் உணவில் தன்னிறைவு பெற்ற நாடாகவும் உருவாக்க வேண்டும்.

இந்த குடியிருப்பாளர்களை வெளியேற்ற அரசாங்க அதிகாரிகள் முடிவு செய்த காலம் இருந்தது. மாகாணசபை உறுப்பினர் என்ற வகையில் நானும் இதில் தலையிட வேண்டியிருந்தது. பொலீஸாரை வெளியேறச் சொன்னோம். அது எளிதில் முடிந்துவிடவில்லை. நாட்டின் சட்டம் எதுவாக இருந்தாலும், நிலத்தின் சட்டம் ஒரே மாதிரியாக இருந்ததால், அரச காணி, நகர அபிவிருத்தி அதிகாரசபை காணி, வீடமைப்பு அதிகாரசபை காணிகளில் நீண்ட காலம் உள்ள சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு காணி உறுதிப்பத்திரம் மூலம் காணி உரிமையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய தொகையை கட்டம் கட்டமாக செலுத்தியேனும் இந்த பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலங்களின் மதிப்பு இருபது ஆண்டுகளுக்கு முந்தைய மதிப்பைப் போல நானூறு மடங்கு அதிகரித்துள்ளது. ரூபாயின் மதிப்பு உயர்கிறது. டொலரின் விலை சரிகிறது. அன்று எத்தனை முறை ஒரு கடிதத்திற்கு முத்திரை ஒட்டினோம் என்பது இங்குள்ள தாய்மார்களுக்குத் தெரியும். அப்போது பத்து சதம் முத்திரையுடன் தபால் அனுப்பினோம். இன்று எவ்வளவு மதிப்பு உயர்ந்துள்ளது என்று பார்த்தால் இன்று கடிதம் அனுப்ப அது போல பல மடங்கு பெறுமதியான முத்திரை ஒட்ட வேண்டும். கையொப்பம் இடுவதாயின் எத்தனை ரூபா பெறுமதியான முத்திரைகள் வேண்டும்? இந்த முத்திரைக் கட்டணத்தை இரத்து செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். அனைவருக்கும் அடையாள அட்டை உள்ளது. ஏன் முத்திரைகள்? இக்குறைபாடுகளை சரி செய்து கொண்டு முன்னேற வேண்டும்.

நிலத்தினது விலை பெருமளவு அதிகரித்துச் செல்லும் நிலையில், நில உரிமையை பெற்றுள்ள நீங்கள் அதை எதிர்கால பிள்ளைகளுக்காக பாதுகாக்க வேண்டும். எப்படியாவது அதைப் பாதுகாத்து, வளப்படுத்தி, புதிய வருமான ஆதாரங்களைச் சேர்க்கக்கூடிய தொழில்வாய்ப்புகளுக்கு எதிர்கால தலைமுறையை வழிநடத்துங்கள் என்றும் கூறியிருந்தார்.

# ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே பிராஞ்ச் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் (09) மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் பெட்ரிக் மெகார்த்தி, சமாதானம், அபிவிருத்திக்கான பகுப்பாய்வாளர் நெத்மினி மெதவல மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் நடப்பு மனித உரிமைகளின் நிலைமை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறை பற்றி இரு தரப்புக்கும் இடையில் விரிவாக கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் இலங்கையின் நல்லிணக்க செயன்முறையை உன்னிப்பாக அவதானிப்பதாக சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் தேர்தல் செயன்முறைக்குள் அரசியல் கட்சிகளால் பின்பற்றபட வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தினர்.

இதன் போது பிரதிநிதிகளால் முன்மொழியப்படுகின்ற பிரேரணைகளுக்கு தமது முழு ஒத்துழைப்பினையும் வழங்கப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவித்தார்.




# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (AI) பயன்படுத்தி செய்தி ஒளிபரப்பு

"ஜெனிவா டைம்ஸ்" நிறுவனம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கடந்த மே மாதம் இரவு நேர செய்தி அறிக்கையை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கியது.

இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளரும் செய்தி அறிவிப்பாளருமாகிய எஸ்.டி.எம்.சஹ்ரானினால் இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

உலகளவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் (AI) தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (AI) பயன்படுத்தி செய்தி ஒளிபரப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

# சம்பளம், வரப்பிரசாதங்களை மீளச் செலுத்த வேண்டும்

## இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை

இலங்கையின் இராஜாங்க அமைச்சராக இருந்த டயானா கமகே இலங்கையின் பிரஜையாக இல்லாத காரணத்தினால் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என உச்ச நீதிமன்றம் அண்மையில் (08) தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை பிரஜை அல்லாத டயானா கமக்கே சட்டவிரோதமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து இதுவரை பெற்றுக் கொண்ட சம்பளங்களையும் வரப் பிரசாதங்களையும் மீளச் செலுத்த வேண்டும் என்றும்இ கள்ளத்தனமாக பாராளுமன்றம்



சென்ற இவர் இந்த நாட்டுப் பிரஜை அல்லாத ஒரே காரணத்திற்காக இலங்கையின் பள்ளின கலாசார விழுமியங்களுக்கு மாற்றமாக கஞ்சா உற்பத்தியை செய்ய வேண்டும், ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதை சட்டபூர்வமாக அனுமதிக்க வேண்டும்இ மதுபான விற்பனைக்கான அனுமதி பத்திரங்களை பரவலாக்க வேண்டும் என்றெல்லாம் பலமுறை பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். அப்படியாயின் இதுவரை இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பெற்றுக் கொண்ட சம்பளம் மற்றும் சலுகைகளுக்கு யார் பொறுப்பு?என இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# இரசாயனம் அற்ற ஊட்டச்சத்து உள்ள உணவு தொடர்பான செயலமர்வு







(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ.எம் சனூன்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் ஊட்டச்சத்து உணவுக்கான பல் துறை செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு சமில இந்திக ஜயசிங்க தலைமையில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இரசாயன ஊட்டச்சத்து இல்லாமல் போஷாக்கான உணவுத் திட்டமிடலை மேற்கொள்ளல் என்ற தொனிப்பொருளின் கீழ் இரசாயன உரப்பாவனை மற்றும் கிருமிநாசினிகளின் பாவனைகளை தவிர்த்து சுகாதாரமான முறையில் வாழவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பிரதேச சபையின் வெளிக்கள ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், அரச ஊழியர்கள், என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சர்வதேச மருத்துவ மாதுக்கள் தின நிகழ்வுகள்




(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மருத்துவ மாதுக்களின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை சர்வதேச மருத்துவ மாதுக்கள் தினம் கொண்டாடப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எஸ். எம்.பாயிஸ், வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாலஸ்தீன மக்களின் தொடர் துயரங்களுக்கு தீர்வு தான் என்ன?





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

பத்திரிகையாளர் சுதந்திரத்தை மீறுவதாக சர்வதேச விமர்சனத்தை ஈர்த்த நடவடிக்கையில், இஸ்ரேல் அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை யுட துயணநசய நிறுவனத்தின் உள்ளூர் செயல்பாடுகளை மூட இஸ்ரேல் அரசு முடிவெடுத்ததைத் தொடர்ந்து, ஜெருசலேம் ஹோட்டல் அறையில் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்த இடத்தில் படையெடுத்தனர்.

மறுபுறம், யுட துயணநசய தங்கள் நிறுவனம் நடுநிலையான ஊடகவியலை வழங்குகிறது என்றும் பத்திரிகையாளர் சுதந்திரத்தை இஸ்ரேல் அரசு முடக்குகிறது என்றும் குற்றம் சாட்டுகிறது. இதுவரையில் ஆன காலகட்டத்தில் அல் ஜஸிரா தொலைக்காட்சி நிருபர்கள் 129 பலியானதாக தெரிய வருகிறது. அதனைத் தொடர்ந்து வெளியான மூடல் உத்தரவுக்கு பின்னர் நடந்த இந்த நுழைவு நடவடிக்கையில், அலுவலக உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேநேரத்தில் அல் ஜஸிரா தொலைக்காட்சி மூடலின் சரியான கால அளவு தெளிவாக இல்லை, 45 நாட்கள் தற்காலிக தடை விதிக்கப்படலாம் என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

கத்தரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகின்ற அல் ஜஸிரா தொலைக்காட்சி யூத அரசின் கடுமையான நெருக்கடியை தொடர்ந்து சந்தித்து வந்துள்ள நிலையில் ஏராளமான மனித உயிர்களை பலி கொடுத்து வந்துள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

காசாவில் உள்ள அல் ஜஸிரா தொலைக்காட்சி அலுவலகம் தாக்கப்பட்டது.அதே நேரத்தில் பல்வேறு துறைகளில் பரிசளித்து வந்த அல் ஜஸிரா தொலைக்காட்சி நிருபர்கள், செய்தியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் குறி வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள்.ஒரு நிருபர் தனது குடும்ப உறுப்பினர்கள் முழுமையாக இந்த தாக்குதலின் போது பறிகொடுத்த சம்பவத்தை கண்டறிந்து போது மனித நேயம் இவர்களிடம் உள்ளதா என்கிற கேள்வி அனைவருக்கும் எழாமல் ஒரு போதும் இருக்க முடியாது என்பதே உண்மையாகும். அந்த அளவுக்கு இஸ்ரேலிய ராணுவம் பொதுமக்கள், குழந்தைகள், பத்திரிகையாளர்கள், டாக்டர்கள், மருத்துவ மனைகள், அகதிகள் முகாம்கள் என்று சொல்லிக் கொண்டே போக கூடிய அளவில் ஆன மிகப் பெரிய அளவிலான தாக்குதலை நடத்தி போது தான் அல் ஜஸிரா தொலைக்காட்சி யூத இனத்தின் நாசகார ராணுவ செயல்பாடுகளை சர்வதேச நாடுகளின் கவனத்திற்கு முழுமையாக கொண்டு வந்தது தான் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரச தலைமைக்கு மிகவும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இருந்தது.இதனால் கடும் சினமுற்ற பெஞ்சமின் நிதான்யாகு வின் சர்வாதிகார தன்மையின் வெளிப்பாடே அல் ஜஸிரா தொலைக்காட்சியை இஸ்ரேலிய நாட்டில் இருந்து வெளியேற உத்தரவிட்டது தான் இதுவாகும்.

அதே நேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரச தலைமை அல் ஜஸிரா தொலைக்காட்சியின் தொடர் செயல்பாடுகளை முழுமையாக நிறுத்தி விட முயல்வதற்கு மூல காரணமாக இருப்பது என்னவென்றால் சர்வதேச நாடுகள் மத்தியில் இந்த செய்தியை கொண்டு சேர்த்தது ஒரு காரணம். இரண்டாவது காரணம் என்னவென்றால், இஸ்ரேலிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் அல் ஜஸிரா தொலைக்காட்சியின் செய்திகளை பார்த்து மிகவும் கடுமையாக குழம்பி போய் ஆர்பாட்டம் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற சூழ்நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு திணறி வருவதே இந்த தொலைக்காட்சி தடையாக அமைந்தது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பெஞ்சமின் நெதன்யாகு வை பொறுத்தவரை எந்தவொரு நிலையிலும் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்து வருகிறார்.ஏனெனில் போர் முடிவுக்கு வரும் நிலையில் இஸ்ரேலிய நாட்டில் தேர்தல் கண்டிப்பாக வந்து விடும் நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு நிச்சயமாக நிச்சயமாக தோல்வியை எல்லா வகையிலும் சந்தித்து விடுவார் என்பதே உண்மையாகும். ஆகவேதான் தனது இருப்புக்கு ஆபத்து ஏற்படும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டு தான் பெஞ்சமின் நிதான்யாகு போர் நிறுத்தம் ஏற்பட்டு விடக்கூடாது என்று ரத்த வெறி கொண்ட நிலையில் தொடர்ந்து அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள், பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார் .

அல் ஜஸிரா தொலைக்காட்சியை இஸ்ரேலிய அரசும் அதன் தொடர்பாளர்களும் ஹமாஸ் இயக்கத்தின் குரலாக செயல்படுவதாக அவர்கள் நம்புகின்றனர்.

அதே நேரத்தில் சர்டிலைட், இன்டெர்நெட் மற்றும் வலைத்தளங்களில் வரக்கூடிய எல்லா விதமான அல் ஜஸிரா தொலைக்காட்சியின் ஒளிபரப்புகளை இஸ்ரேலிய அரச தலைமை தடை செய்துள்ளதன் காரணமாக நடுநிலை யூத அரசியல் நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் உண்மை நிலவரங்களை அறிந்து கொள்ள முடியாத ஒன்றாக மாறி விட்டது.

இஸ்ரேலிய பொது மக்களில் பெரும்பாலானோர் பெஞ்சமின் நிதான்யாகு வின் ஆட்சிக்கு எதிரான மனநிலையில் தான் இருந்து வருகின்றனர். இதனால் பல்வேறு இடங்களில் பொது மக்கள் போராட ஆரம்பித்ததற்கு மூல காரணமாக அல் ஜஸிரா தொலைக்காட்சியே காரணம் என்று பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு நம்புகிறது.

இந்த நிலையில் தான் காஸாவின் ராஃபா நகரிலிருந்து பொது மக்களை வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டுள்ள நிலையில், எகிப்து-கத்தார் முன்மொழிந்த போர்நிறுத்த பரிந்துரையை ஏற்றுக்கொள்வதாக ஹமாஸ் அறிவித்துள்ள நிலையிலும் இஸ்ரேலிய அரசு அதனை ஏற்றுக் கொள்ள முன்வராத சூழலில் தான் தற்போது போர் தொடங்கி விட்டது.

இதற்கு முன்னதாக போர் நிறுத்தத்துக்கான ஒப்புதலை கத்தார் பிரதமர் மற்றும் எகிப்து உளவுத் துறை அமைச்சரிடம் ஹமாஸ் படைத் தலைமைத் தளபதி இஸ்மாயில் ஹனியே தொலைப்பேசி வாயிலாக தெரிவித்தகாக ஹமாஸ் கடந்த திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

குறிப்பாக இஸ்ரேலிய அரச விதித்த அணைத்து நிபந்தனைகளையும் ஹமாஸ் இயக்கம் ஏற்றுக் கொள்ள முன்வந்த நிலையில் தான் அதனை இஸ்ரேலிய அரசு முழுமையாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

இற்கிடையே ரஃபா எல்லையில் தாக்குதலை தொடங்கி விட்ட இஸ்ரேலிய அரச தலைமை வழக்கமான முறையில் பொதுமக்களை ஈவு இரக்கம் இல்லாமல் படுகொலைகளை செய்ய ஆரம்பித்த நிலையில் சர்வதேச சமூகம் மிகுந்த பதட்டத்தை தற்போது வெளிப்படுத்தி வருகின்றது.இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைய தொடங்கிய மே 6-ம் தேதி முதல் 80 ஆயிரம் பேர் ராஃபாவில் இருந்து, வேறு புகலிடம் தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர்.இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் பாதுகாப்பான இடம் என்று எதுவுமில்லை எனவும் முகமை கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் -ஹமாஸ் மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு கத்தார், எகிப்து ஆகிய இரண்டு மத்திய கிழக்கு நாடுகள் பல மாதங்களாக பல்வேறுகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தின.

இதற்கு முன்னதாக போர் நிறுத்தத்திற்காக ஹமாஸ் தரப்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து எல்லாம் பேசப்பட்ட நிலையில் இ ஸ்ரேல் படையினரைத் திரும்பப் பெற்றால், பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்க தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாகிய நிலையில் திடீரென இஸ்ரேலிய அரச போர் பிரகடனத்தை அறிவிப்பு செய்து விட்டது. இது போன்ற செய்திகள் பாலஸ்தீன மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருந்த போதிலும் அது முழுமையாக நீடிக்கவில்லை என்பதை நாம் அறிவோம்.

இதன் பின்னர் இஸ்ரேலிய அரச தலைமை பொய்யை காரணமாக்கி போரை அறிவித்தது.அதற்கு காரணமாக போர் நிறுத்த பரிந்துரை இஸ்ரேலுக்கு ஏற்ற வகையில் இல்லை எனவும் அந்நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதாவது ஹமாஸ் மீது ஏற்பட்ட அச்ச உணர்வு தான் இஸ்ரேல் நாட்டின் ராணுவம் தொடர்ந்து போர் செய்ய முடிவு செய்து இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இதையடுத்து, காஸாவின் ராஃபா நகரிலிருந்து வெளியேறுமாறு சுமார் 1 லட்சம் பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டுள்ளது.

ராஃபா நகருக்குள் நுழைந்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தினால் அது மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தும். இது எண்ணற்ற பொதுமக்கள் உயிரிழப்பதற்கு வழிவகுக்கும் என்று ஐ.நா. அகதிகள் நலப் பிரிவான யு.என்.ஆர்டபிள்யு.ஏ இஸ்ரேலின் இந்த உத்தரவைக் கண்டித்துள்ளது.

எனினும் அதைப் பொருட்படுத்தாமல், ‘ராஃபாவில் ஆயுதப் படையினருக்கு எதிராக நாங்கள் மிகக் கடுமையான தாக்குதல் நடத்தவிருப்பதால் பொதுமக்கள் அங்கிருந்து பாதுகாப்பான பகுதிக்கு உடனடியாக வெளியேற வேண்டும்’ என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ராஃபாவில் இருந்து எங்கே செல்வது? என நிர்கதியாய் நிற்கும் அங்குள்ள லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்கள் கதறுகின்றனர்.

இஸ்ரேல் ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள கிழக்கு ராஃபாவிலிருந்து, ஏராளமானோர் தங்கள் உடைமைகளை ஏந்திக்கொண்டு சுமை வாகனங்கள், கார்கள், கழுதை பூட்டிய வண்டிகள் என தங்களிடமுள்ள அனைத்து வகையான வாகனங்களையும் பயன்படுத்தி அங்கிருந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். பலர், நடந்தே வேறு இடங்களுக்குச் செல்வதையும் காண முடிகிறது என அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காஸாவில் உள்ள மக்களுக்கக நிவாரணப் பொருள்கள், உதவிகள் செல்லும் முக்கிய வழிப்பாதையாக அமைந்துள்ள கிழக்கு ராஃபாவின் ‘ராஃபா எல்லைப் பகுதியை’ இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்துள்ளதால், காஸாவுக்கான நிவாரணப் பொருள்கள் சென்றடைவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலையில் ரஃபா இடுகாடாக மாறி வரும் நிலையில் இஸ்லாமிய உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பது மிகுந்த அவலத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.குறிப்பாக சவுதி அரேபியா அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய அரசுகளுடன் ரகசிய தொடர்பில் இருந்து வருவதாக அரபுலக தொடர்பு செய்திகள் மூலம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. துருக்கி, எகிப்து போன்ற ஏனைய தேசங்கள் கருத்துக்களை மட்டுமே பதிவு செய்து வருகின்றனர். யாரும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் ரஃபா பகுதியில் தாக்குதல் நடத்த முயன்றால் அது மிகப் பெரிய அளவில் ஆன மனித உயிர்களை பலி கொடுத்து விடும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் சர்வதேச நாடுகள் மத்தியில் இல்லை என்பதே உண்மையாகும்.ஆனால் , சர்வதேச இன கறுவருத்தல் பட்டியலில் முதலிடத்தில் தன்னை உலகம் அடையாளப்படுத்தும் வகையில் யூத ராணுவம் மற்றும் பெஞ்சமின் நிதான்யாகு வின் கடும் போக்குவாத வங்குரோத்து நடவடிக்கைகள் காரணமாக மிகுந்த பதட்டம் நிலவுகிறது. அதே நேரத்தில் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து நல்ல அனுபவம் பெற்ற நிலையில் ராஃபாவில் மிகுந்த உயிர் இழப்பை இஸ்ரேலிய ராணுவம் விலையாக கொடுக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இதற்கிடையே இஸ்ரேலிய நாட்டின் உட்புறம் பெஞ்சமின் நிதான்யாகு வின் ஆட்சிக்கு எதிராக மக்கள் திரளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.குறிப்பாக கடத்தப்பட்ட இஸ்ரேலிய பொது மக்கள் குறித்த கவலைகள் அந்த நாட்டின் பொது மக்கள் இடையே அதிகரித்து வரும் நிலையில் எதனை குறித்தும் துளியும் கவலைப்படாத நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு வின் முடிவு அமைந்துள்ளது.

அமெரிக்க அரசு அவசரமாக எடுக்கப்பட்ட முடிவுகள் காரணமாக மார்க் 84 வகையிலான 25 கிலோ எடை கொண்ட வெடி குண்டு குண்டுகளை இஸ்ரேலிய ராணுவத்திற்கு சப்ளை செய்ய போவதில்லை என்று அமெரிக்கா முடிவு எடுத்து நிலையிலும் , பிரான்ஸ் உட்பட நேச நாடுகள் அனைத்தும் வேண்டுகோள் விடுத்த நிலையிலும் பெஞ்சமின் நிதான்யாகு அனைத்தையும் நிராகரித்த நிலையில் தற்போது போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

ரஃபா பகுதியில் நெருக்கமாக வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் தான் இந்த பகுதியில் இஸ்ரேலிய ராணுவம் குண்டு தாக்குதலை தொடரும் பட்சத்தில் மிகுந்த உயிரிழப்பு ஏற்படும் அபாயத்தை குறைக்க இயலவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். , ரஃபா பகுதியில் இருந்த வேறு பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டும் என்று இஸ்ரேலிய ராணுவம் சுட்டி காட்டி கட்டளை பிரபித்த இடம் எந்தவொரு அடிப்படை வசதிகள் கூட இல்லாத மிகவும் மோசமான ஒரு பகுதியில் இலட்சக்கணக்கான பாலஸ்தீன மக்கள் எவ்வாறு இடம் பெயர்ந்து செல்ல முடியும் என்கிற கேள்விக்கு இஸ்ரேலிய நாட்டின் அரசு மொளனியாக தனது பாவம் நிறைந்த காரியத்தை போர் மூலம் தொடங்கி விட்டது தான் தற்போதைய நிலையாகும்.

இதற்கிடையே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் சர்வதேச ஊடக பேட்டியில் ஊடாக தான் யார் என்பதையும், தனது நோக்கம் என்ன என்பதையும் மிகவும் தெளிவாக சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள கூடிய அளவில் கூறியுள்ளார். மிகுந்த கவலை தரக்கூடிய வகையில் அமைந்துள்ள அவரது பேட்டியில் அமெரிக்கா தமக்கு உதவி செய்யவில்லை என்கிற நிலையிலும் தாமே தனித்து நின்று போர் செய்ய போவதாக கூறியது தான் ஒட்டுமொத்த மனித சமூகத்திற்கும் விடப்பட்ட அறை கூவலாக அமைந்துள்ளது. அமெரிக்க தமக்கு உயர்தர குண்டுகளை தராவிட்டாலும் தங்களிடம் அது போன்ற சக்தி வாய்ந்த நாசகார குண்டுகள் இருப்பதாக கூறியுள்ளதன் மூலம் ரஃபா எல்லையில் பொதுமக்களை படுகொலை செய்யப் போவதாக அவர் கூறியுள்ளார். இந்த பேட்டியின் சாராம்சம் என்பது ஹமாஸ் இல்லாத தனது நாட்டின் அடிமை தேசமாக பாலஸ்தீனத்தை எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்பதே பெஞ்சமின் நிதான்யாகு மற்றும் கடும் போக்குவாத யூத அரசியல்வாதிகளின் நோக்கமாக உள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற குண்டு வீச்சு தாக்குதலுக்கு பலியான பொது மக்களின் உயிரிழப்பு சம்பவங்களுக்கு அமெரிக்காவே தமக்கு உதவி செய்ததை இந்த ஊடக நேர்காணல் ஊடாக பெஞ்சமின் நிதான்யாகு ஒப்புக்கொண்டார்.

பெஞ்சமின் நெதன்யாகுவினா இந்த இரத்த வேட்டை மற்றும் வெறி பிடித்த நடவடிக்கைகளுக்கு பாலஸ்தீன அப்பாவி பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு வருவதை அரபுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பது தான் சர்வதேச சண்முகத்தை முழுமையாக அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ரஃபா எல்லையில் பாலஸ்தீன மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்கள் வரக்கூடிய எல்லா வழிகளையும் இஸ்ரேல் ராணுவம் முழுமையாக தடுத்து விட்ட நிலையில் மிகப்பெரிய பட்டினிச் சாவுகள் அந்த பகுதியில் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. பெரும்பாலான மருந்து பொருட்கள், குடிநீர் இல்லாமல் மக்கள் தொடர்ந்து அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளார்கள்.

இறுதியாக நாம் ஒன்றை மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது.பாலஸ்தீன மக்களுக்கு இனி இழப்பதற்கு ஒன்றுமே இல்லை என்பதே உண்மையாகும். காஸ முழுமையாக மனிதர்கள் வாழ சாத்தியம் இல்லாத பகுதியாக மாறி விட்டது.பாலஸ்தீன பொதுமக்கள் தங்கள் உயிர்களை காப்பாற்ற அங்குமிங்கும் அலைந்து திரியும் காட்சி மிகுந்த அவலத்தை தான் நாகரீக சமுகத்தின் முன் ஏற்படுத்தி உள்ளது.இந்த அவலத்தை தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு கையாலாகாத தன்மைக்கு நாகரீக சமுகம், சர்வதேச நாடுகளின் தலைவர்களும் சென்று விட்டார்கள் என்பதே யதார்த்தமான உண்மையாகும். இன்று உலகம் மக்களின் உயிர்களை காப்பாற்ற பல்வேறு மருத்துவம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றி பெற்று வரும் நிலையில் தான் ஒரு தனி மனிதனின் சுயநலம் மட்டுமே அப்பாவி பொதுமக்கள், குழந்தைகளை இந்த அளவுக்கு மரணத்தின் விளிம்பில் கொண்டு சென்று நிறுத்தி விட்டது. பெஞ்சமின் நிதான்யாகு போன்ற சர்வாதிகார தலைமை பாலஸ்தீன பொதுமக்கள் தங்கள் உரிமைகளை காத்து கொள்ள எந்தவொரு நிலையிலும் ஆயுத குழுக்கள் இல்லாத நிராயுதபாணிகளாக மட்டுமே வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். தற்போதைய சூழலில் எந்தவொரு நிலையிலும் சாத்தியமே இல்லாத ஒன்றை தான் பெஞ்சமின் நிதான்யாகு கற்பனை செய்து வருகிறார் என்பதில் எந்த ஐயமும் இல்லை. உலக வரலாற்றில் சர்வாதிகார தலைவர்களின் முடிவுகள் என்ன ஆனது என்பதை வரலாற்று படிப்பினைகள் நமக்கு கடந்த காலங்களில் மிகப்பெரிய படிப்பினைகளை தெளிவாக கற்று தந்துள்ளது. அது போன்ற மோசமான வரலாற்று சம்பவங்கள் தான் தற்போது பாலஸ்தீனத்தில் நடந்து வருகிறது.ஒரு வேளை ஒட்டு மொத்த மனித சமூகமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வராத சூழலில் கூட தனித்து நின்று போராடி வெற்றி பெற்றதாகவே பாலஸ்தீன வரலாறு நாளை அமைய போவதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

ஏனெனில் கடும் துயரங்களுக்கு பின்னர் பாலஸ்தீன மக்களின் வேதனைகள் மற்றும் இழப்புகள் இலேசாக்கப்படும் என்பதே தவிர இன்று நமக்கு வேறு வடிவிலான நம்பிக்கை ஒன்றும் இல்லை என்பதே உண்மையாகும்......!

# டயனாவின் இழப்பு; ஐ.ம.ச.க்கு ஆபத்தில்லை!



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உள்ளாசப் பிரயாணத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்த டயனா கமகே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளார். ஜனாதிகதித ரனில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்தில் இணைந்து இராஜாங்க அமைச்சர் பதவியை வகித்து வந்த நிலையில் அவரது உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றது என்ற தீர்ப்பளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான தீர்ப்பு 2024.05 08 ஆம் திகதி மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழுவால் வழங்கப்பட்டது. ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறான மனுவை தள்ளுபடி செய்து டயனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி சரியானது என்றும் அவர் இங்கிலாந்து பிரஜா உரிமை பெற்ற பிரசை என்பதை நரூபிக்க போதிய சான்றுகள் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து நிராகரித்திருந்தது. இந்த நிரகரிக்கப்பட்ட மனுவை சரியானது என்று தீர்ப்பளிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்த மனு மீதான தீர்ப்பின் போது உயர் நீமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்திருக்கின்றது.

உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு காரணமாக டயனா கமகே பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்ததால் அவரது இராஜாங்க அமைச்சர் பதவியும் பரிபோய்விட்டது. ஏற்கனவே உள்ளாசப் பிரயாணத்துறை இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த போது நாட்டில் கஞ்சா செய்கை பன்ன சட்ட ரீதியான அனுமதி வழங்க வேண்டும், தலைநகரில் சிவப்பு விளக்கு (பகிரங்க விபச்சார) பகுதி அமைக்கப்பட வேண்டும், ஓரினச் சேர்க்கைக்கு சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றெல்லாம் புரட்சிகரமான கோரிக்கைகளை விடுத்து வந்த ஒரு பெண் அமைச்சராக டயனா கமகே திகழ்ந்தார். அதற்காக அவர் முன்வைத்த காரணிகளாக அமைந்தவை உள்ளாசப் பிரயாணத்துறை வளர்ச்சியடையவும் உட்சாகமடைந்து நாட்டிற்குள் டாலர்கள் வந்து பொருளாதாரம் செழிப்படைந்து நாடு சுபீட்சம் அடைய இவ்வாறான சமூக சீர்கேடுகளுக்கு வழிவகுக்கக் கூடிய அனாச்சார வலயங்கள் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமது பாராளுமன்ற சிறப்புரிமையகளை அதற்காக இயன்றவரை பயன்படுத்தி வந்தார்.

இப்படிப்பட்ட டயனா கமகே உண்மைக்குப் புறப்பான போலியான ஆவணங்களை சமர்ப்பித்தே பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்திருந்ததர் என்பது உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பின்னரே வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. டயனாவுக்கு இருந்தது பிரிடிஷ் பிரஜா உரிமையாகும். இரட்டை பிரஜா உரிமை இருக்கவில்லை. அதன்படி அவர் வெளிநாட்டு பிரசையாவார். இலங்கையின் அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு பிரசைகள் எவரும் இந்த நாட்டில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க முடியாது. ஆனாலும் டயனா கமகே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றம் வந்த பின்னர் அப்போதைய கோதாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு மாறி பிரதி அமைச்சர் பதவியை பெற்றதோடு பின்னர் 2022 இல் நடந்த ஆட்சி மாற்றத்தோடு ரனில் விக்கிரமசிங்காவின் ஆதரவாளராக மாறி மீண்டும் இராஜாங்க அமைச்சராக பதவியை தக்க வைத்துக் கொண்டார்.

2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அரசியல் மைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட போது எதிர்க்கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் 20 ஆவது திருத்ததிற்கு ஆதரவாக வாக்களித்தார். அந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி ஒழுங்கு விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அப்போதைய கோதாபய அரசிலல் இணைந்து போக்குவரத்து இராஜாங்க அமைச்சரானார். அதன் பின்னர் 2022 மே இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தோடு ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாகியவுடன் அவருக்கு ஆதரவாக செயற்பட்டமையால் உள்ளாசப் பிரயாணத்துறை இராஜாங்க அமைச்சரானார். இவரது தாய் இங்கிலாந்து பிரசையாவார். தந்தை இலங்கையைச் சேர்ந்தவர். டயனா ஆரம்ப கல்வியை இலங்கையில் கற்றாலும் இங்கிலாந்தில் க.பொ.த (உ.தர) மற்றும் உயர் தரம் ஆகிய பரீட்சைகளை எழுதியதோடு மேற்படிக்பையும் இங்கிலாந்தில் கற்ற அதே நேரம் அந்நாட்டு பிராஜா உரிமையை பெற்று அங்கேயே வாழ்ந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தான் இலங்கை வந்து அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார்.

ஆனாலும் இலங்கை அரசியலில் ஈடுபட அரசியல் அமைப்பு சொல்லும் சட்ட விதிமுறைகளுக்கு மாற்றமான அடிப்படையில் உண்மைகளை மறைத்து செயறபட்டமையை அப்போதைய ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அறிந்திருக்கவில் லை. தேர்தல் ஆணைக்குழுவும் அதுபற்றி தேடிப்பார்ப்பதில்லை. இந்நிலையில்தான் 2021.03.09 ஆம் திகதி குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு இவர் பற்றியும் இவரது பிராசா உரிமை பற்றியும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் அதுபற்றிய போதிய புலன் விசாரணைகள் செய்யப்படவில்லை. சமூக செயற்பாட்டாளர் ஓசல தொடர்ச்சியாக டயனா பற்றிய முறைப்பாட்டை முன்னெடுத்ததால் இத்தகைய மோசடிகளும் சட்டம் இயற்றும் சபையான பாராளுமன்றத்தையே தவறான முறையில் வழி நடத்தி இருப்பதும் அம்பலமாகி இருக்கின்றது.

ஆனாலும் பதவி வகித்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சிறந்த ஒரு அதிரடி பேச்சாளராக திகழ்ந்தார். எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரோடும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபடக் கூடியவராக திகழ்ந்தார். அண்மையில் பாராளுமன்ற த்திற்குள் சமகி ஜனபலவேகய உறுப்பினர்களோடு கைகலப்பில் ஈடுபட்டதால் ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றதிற்குள் செல்ல முடியாதவாறு தடை விதிப்புக்கும் உட்பட்டிருந்தார். இந்நிலையில் இலங்கை பிரசை அல்லாத இவர் எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினரானார் என்பது பிரதான கேள்வியாக இருந்து வந்த நிலையில் சமூக செயற்பாட்டாளரான ஓசல ஹேரத் என்பவரால் தாகக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கி டயனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்கி இருக்கி ன்றது.

இந்த தீர்ப்பின் பின்னர் டயனா குடிவரவு குடியகழ்வு சட்டங்களை வெளிப்படையாக மீறி இருப்பது தெரிய வந்திருக்கின்றது. அத்துடன் நாட்டின் தன்னாதிக்கம், இறைமை பற்றி பேசக்கூடிய சட்டம் இயற்றுகின்ற சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தையே ஏமாற்றி சட்டவிரோத பிரசையாக கடந்த 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதி அமைச்சராகவும் இராஜ போகங்களை அனுபவித்தவராக இருந்துள்ளார்.

இந்நிலையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் டயனா கமகேயின் உறுப்பினர் பதவி பறிபோனதால் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய (ஐக்கிய மக்கள் சக்தி) கட்சியின் 53 பாராளுமன்ற உறுப்பினர்களது பதவிக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற வாதப் பிரதிவாதங்களும் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. சமகி ஜனபலவேகய என்ற அரசியல் கட்சி இந்த டயனா கமகேயினால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்றும் அக்கட்சியின் செயலாளர் நாயகம் டயனா என்றும் சொல்லப்பட்டு வருவதே இவ்வாறான சந்தேகங்கள் ஏற்பட காரணம் ஆகும். ஆனாலும் அவ்வாறான நிலைமைகள் இல்லை என்பதை சமகி ஜனபலவேகயவின் செயலளார் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவால் ஆரம்பிக்கப்பட்ட சமகி ஜனபலவேகய கட்சி பல சிறிய அரசியல் கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணி கட்சியாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகும். தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ள கட்சியாக இருந்தாலும் ஆரம்பத்தில் அக்கட்சியின் செயலாளராக இருந்தவர் பதவி பறிபோன இராஜாங்க அமைச்சராக இருந்த டயனா கமகே ஆவார். ஆதன் தவிசாளராக பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இருக்கின்றார். இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாசாவும் செயலாளர் நாயகமாக ரஞ்சித் மத்தும பண்டாரவும் நியமிக்கப் பட்டுள்ளனர். ஏற்கனவே தேர்தல் திணைக்களத்திலும் செயலாளர் நாயகமாக ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு அகஸ்ட் மதம் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட போது அவற்றில் கையொப்பம் இட்டிருப்பது சமகி ஜனபலவேகய (ஐக்கிய மக்கள் சக்தி) வின் செயலாளர் நாயகம் என்ற வகையில் ரஞ்சித் மத்தும பண்டார ஆவார். ஆதனால் இந்த கட்சிக்கும் டயனாவுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்று மத்தும பண்டார தெரிவித்தார். டயனா வகித்த

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க....





மலேஷிய சர்வதேச உலமாக்கள் மாநாட்டில் பங்கேற்ற அகில இலங்கை ஜெம்மியதுல் உலமா சபையின் உதவிச் செயலாளரும் ஜெம்மியதுஷ் ஷபாப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம் மலேஷியாவின் செனட்டரும், பிரதமர் அன்வர் இப்றாஹீமின் மத விவகார அமைச்சருமான டாக்டர் ஹாஜி முஹம்மத் நயீம் அவர்களை சந்தித்து கலந்துரையாடுகையில்....

## அன்னையர் தின சிறப்புக் கட்டுரை

# தொப்புள் கொடி குழந்தையை தாயுடன் இணைக்கிறது



பூமியில் தன்னலமற்ற தன்மையை சுமந்தவள் தாய். பிறப்பதற்கு முன்பே தன் குழந்தைகளை நேசிக்க ஆரம்பிக்கிறாள் அவள்.

தன் உடலை, உணர்வுகளை, ஆசைகளை எல்லாமே விருப்பத்தோடு அர்ப்பணிக்கிறாள். இந்த அர்ப்பணிப்புகள் அழகான மனிதனை வெறும் கண்களால் காண வரமாய் அமைகின்றது.

ஒரு குழந்தைக்குத் தெரிந்த முதல் நபர் தாய்.

குழந்தை கருத்தரித்த தருணத்திலிருந்து, அது தனது தாயுடன் பழக ஆரம்பிக்கிறது.

உறவு கொள்கிறது.

உடலால் இணைகிறது.

உணர்வால் இணைகிறது.

அறிவால் இணைகிறது.

தொப்புள் கொடி குழந்தையை தாயுடன் இணைக்கிறது.

இந்த இணைப்பு அழகாக இணைகிற பொழுது ஆரோக்கியமான மனிதன் உலகுக்கு தயாரிப்பு செய்யப்படுகிறான்.

ஒன்பது மாத கருவறை வாழ்க்கை தாய்க்கும் அவளுடைய குழந்தைக்கும் இடையே நீடித்த பிணைப்பை உருவாக்க பயன்படுகிறது,

ஆனால் இது ஒரு ஆரம்பம் மட்டுமே.

இதை அழகான ஆரம்பமாக, மகிழ்ச்சியான ஆரம்பமாக ஆரம்பிக்கும் போது மட்டுமே அழகான சமூகம் உருவாக வளமான வித்து தூவப்படுகிறது என்று பொருள் கொள்ளலாம்.

ஒரு குழந்தையின் உலகம் அதன் தாயைச் சுற்றியதாகவே ஆரம்பிக்கிறது என்பதுவே உண்மை.

தன்னைப் புரிந்துகொள்ளக்கூடிய நபர்களில் தனது தாய் முதன்மையானவர் என்று நம்புகிறது.

பிறப்பிலிருந்தே, ஒரு குழந்தை தனது தாயை நம்ப கற்றுக்கொள்கிறது. இந்த நம்பிக்கை சார்ந்த உறவிலிருந்து, குழந்தை தன் வாழ்க்கையில் மற்றவர்களுடன் நம்பிக்கையை வளர்க்க கற்றுக்கொள்கிறது.

அதனால் தாய்மையால் பாக்கியம் பெற்ற ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளுக்கு ஒரு நேர்மறையான முன்மாதிரியை வழங்க வேண்டியவளாக இருக்கிறாள்.

குழந்தையின் நம்பிக்கை என்பது தாயை அடிப்படையாகக் கொண்டதாக அமைவதாக இருந்தால், தன்னை தரமான தாயாக மாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு தாயிடம் இருக்க வேண்டும். நல்ல மனிதர்களை உருவாக்கும் ஆசையும் நம்பிக்கையும் எந்தத் தாயிடம் இருக்கிறதோ அந்தத் தாயிடம் இருந்து தான் நம்பிக்கையும் நாணயமும் உள்ள சமூகம் உருவாகும்.

தாய்மைக்கான நிபந்தனையற்ற அன்பையும் பாதுகாப்பையும் ஆதரவையும் பகிர்ந்து கொள்வது ஒவ்வொரு கணவரின் கடமையாக இருக்க வேண்டியதுடன் சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டுமானால் சிறந்த தாய்மார்களை உருவாக்கும் பொறுப்பு சமூக அமைப்புகளுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் உண்டு என்பதை புரிந்து அதற்கான அத்திவாரங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நினைவு படுத்திக் கொள்கிறோம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மனநலமும் ஆலோசனையும் 30

# பயணம் தெளிவானால் பாதையும் தெளிவாகும்

நாம் வாழ்க்கையில் இலக்குகளுடன் அல்லது எதிர்பார்ப்புகளுடன் நகர்கிறோம்.

அப்படி நகர்ந்தாலும் சிலசமயங்களில் அடைய ஆசைப்படுவதை அடைய முடியாது போகும் சந்தர்ப்பங்களை சந்திக்கிறோம்.

இன்னும் சில சமயங்களில் நம்மால் அடைய வேண்டியவற்றில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கிறோம்.

சில சமயங்களில் வாழ்க்கையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சரியாக செய்யாததனாலும் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாகத் தெரியாததனாலும் நாம் இவ்வாறான நிலைகளை சந்திக்க நேரிடுகிறோம்.

எங்கள் பார்வையும் பயணமும் தெளிவான நோக்கம் கொண்டதாக இருந்தால் மட்டுமே நாங்கள் திசை திரும்பாமல் போக வேண்டிய இடத்துக்கு போய் சேரலாம்.

சரியானதைச் செய்வதிலிருந்தும் பொருத்தமானதை தெரிவு செய்வதில் இருந்தும் மட்டுமே சிறந்த முடிவுகளை எடுக்கத் தேவையான அறிவு எமக்குள் உருவாகிறது.

சரியானதை தெரிவுசெய்து, சரியானதைச் செய்வதன் மூலம் வரும் முடிவுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

நாங்கள் தொடர்ந்து சரியானதைச் செய்வதற்கு எங்களை பழக்கப்படுத்திக் கொள்ளும்போதும் சரியானதை செய்வதற்கு தேவையான ஆதாரங்களை தேடும் போதும் எங்கள் பயணத்தின் முடிவெல்லையை மிகவும் இலகுவாக அடையலாம்.

வெற்றியை நோக்கிய பயணம் என்பது நாம் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அடுத்த படியை அடைவதற்காக உழைக்கும் செயல்முறையாகும், நாம் முன்வைக்கும் ஒவ்வொரு அடியும் எங்களைத் தூ ண்டி, தவறாமல் முன்னேறத்தை அடைய ஊக்குவித்துக் கொண்டே இருக்கும்.




வெற்றியை நோக்கி போகும் பயணம் ஒருபோதும் முடிவடையாத ஒரு அற்புதமான பயணம்.

அந்த பயணத்திற்கான உறுதியான அத்திவாரம் சரியானது எது, சரியானதை செய்வது எப்படி என்பதை தெரிவு செய்வதாகும்.

பயணத்தின் வெற்றி, நாம் ஏன் பயணிக்கிறோம் என்பதைப் பொறுத்தும் பயணத்தின் தன்மையை சரியாக புரிந்து கொள்வதிலும் தங்கியிருக்கிறது.

சரியான பதிலைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் சரியான கேள்வியைக் கண்டறிவோம் என்பதில் உறுதியாக இருப்போம்....!

போகவேண்டிய சரியான பாதையை கண்டு பிடித்து அந்தப் பாதையில் பயணம் செய்வோம்...!

பழைய சிந்தனை முறைக்குள் விழுந்து விடாமல் வெற்றியைப் பற்றி வித்தியாசமாக சிந்திப்போம்....!

இலக்கின்றி அலைவதற்குப் பதிலாக, நமது இலக்கையும் நோக்கத்தையும் புரிந்து பயணிப்போம்...!

"எங்கு செல்ல வேண்டும் என்று தெரியாத மாலுமிக்கு சாதகமான காற்று கிடைப்பதில்லை"



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# விவாகரத்து வழக்குக்கு லஞ்சம் பெற்ற காதி நீதிபதி விவகாரம்: முஸ்லீம் சமுதாயத்தின் அவதானத்திற்கு!

## சட்டத்தரணி சரீனா அப்துல் அஸீஸ் கருத்து!

விவாகரத்து தொடர்பான வழக்கு ஒன்றுக்கு சென்ற பெண்ணிடம் லஞ்சம் பெற்ற புத்தளம் காதி நீதிபதி இலஞ்ச விசாரனை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளமை யாவரும் அறிந்ததே இவரது இச்செயற்பாடு காரணமாக சிறப்பாகப் பணிபுரியும் ஏனைய காதிநீதவான்களுக்கும் தலைகுணிவையேற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் முஸ்லீம் சமுதாயத்தின் அவதானத்திற்கு சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான திருமதி சரீனா அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நன்னடத்தை அற்ற காதி நீதவான்களை நியமிப்பதனூடாக "காதி முறைமை" தவறானது என்று நிரூபிக்க ஏதேனும் திட்டங்கள் திரை மறைவில் உயர் மட்டத்தில் அரகேற்றப்படுகின்றதா..? என்ற எண்ணம் தோன்றுகிறது.

காதி நீதிபதி நியமனம் தொடர்பில் தகைமை அற்றவர்களை நியமிப்பதினூடாக ஏதேனும் சதி வலைகள் எம்மை நோக்கி பின்னப்படுகின்றதா எனவும் எண்ணத் தோன்றுகிறது. எமது சமூகத்தில் எழுப்பப்படும் முக்கியமான பின்வரும் கேள்விகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாம் கேட்க வேண்டியவர்களாக உள்ளோம்.

1. இந்த குறிப்பிட்ட காதி நீதிபதியாக நியமிக்கப்படவர் தகைமை அற்றவர் என்றும், அவரது நன்னடத்தை கேள்விக்குட்படுத்தப்பட்டு பல விடயங்கள், புத்தளம் மாவட்ட மக்களால் அறிவிக்கப்பட்ட பின்னும்..! இவர் யாருடைய சிபாரிசில் நீதி சேவை ஆணை குழு இவரை தெரிவு செய்தது..?

2. சமூக வலை தளங்களில் மிகவும் மோசமான விடயங்கள் இவர் தொடர்பில் வெளி வந்து, அவரது நடத்தை பல விமர்சனங்கள் செய்யப்பட்ட பின்னும் நீதி சேவை ஆணை குழுவால் இக்காதி நீதவான் எவ்வாறு நியமனம் செய்யப்பட்டது?

3. புத்தளத்து முஸ்லீம் மக்களால்..! இவரது நன்னடத்தை குறித்து குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கபட்ட பின்னும்..! அந்த விடயத்தை குறித்த அதிகாரிகள் ஏன் கவனத்தில் எடுக்க வில்லை..?

4. காதி நீதிபதியாக தெரிவு செய்யப்படும் நபர் "நன்நடத்தை உள்ளவராக இருக்க வேண்டும்" என்பது முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் ஒரு முக்கிய தகைமை ஆகும்..!

இருந்தும் நியமனத்தை உறுதி செய்யும் பதவியில் இருக்கும் அதிகாரிகள் ஏன்..?

இந்த முக்கியமான தேவைப்பாட்டை கவனிக்காமல் அல்லது உதாசீனப்படுத்தி விட்டு, தகமை அற்ற இவரை இந்த



பதவிக்கு நியமனம் செய்தார்கள்..?

5. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியமனம் தொடர்பான முஸ்லிம் விவாக விவாகரத்து கட்டளை சட்டத்தின் "நன்னடத்தை உள்ளவராக இருக்க வேண்டும்"என்ற நிபாந்தனையை ஏன் சரியாக செயல்படுத்தவில்லை ..?

6. சர்ச்சைக்குரிய இவரை காதி நீதிபதியாக நியமிக்கும் போது "நன்னடத்தை"என்ற விடயம் ஏன் நியமன அதிகாரிகளால் புறக்கணிக்கப்பட்டது?

7 . நீதிச் சேவை ஆணைக் குழு அவர் குறித்த புகார்களை கவனிக்க தவறியதா..? அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், புகார் குறித்து அவர்களுக்கு தெரியாமல் இருப்பதற்கு என்ன காரணம்..?

8. கடமையிலிருக்கும் அதிகாரிகள் அவசியமான நடவடிக்கைகளை உடன் எடுக்க தவறியுள்ளார்களா..?

9. நீதி சேவை ஆணைக்குழுவில் காதி நீதிபதியின் நியமனம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் துறை சார் அனுபவமுள்ளவர்களால், இந்த பதவியின் சமய ரீதியான முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளதா? அல்லது உதாசீனம் செய்யப்படுகின்றதா..? என்பதை கண்டறிய பொறுப்பு மிக்க அதிகாரிகள், முஸ்லீம் தலைமைத்துவம்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் முன்வர வேண்டும். எமது உரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்து அவற்றில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, அதன் முழுமையான பயன்பாட்டை முஸ்லீம் மக்கள் அனுபவிக்க, ஒன்றிணைந்து செயல்படுவது இன்றியமையாதது.

யாரேனும் காதி நீதவான்கள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டால் சமூகமாய் நங்கள் அவர்களை அவதானிப்போமானால் நிச்சயமாக எதிர் காலத்தில் இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களை இலகுவாக கண்டறியலாம்.

அத்துடன் நீதமான ஒரு காதி நீதி மன்ற முறைமையை கட்டி எழுப்பலாம். அத்துடன் உண்மையான இறையச்சத்துடன் இந்த சேவையை நீதமாக செய்து வரும் காதி நீதவான்களின் கௌரவத்தையும் பாதுகாக்கலாம். எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மொஹம்மட் ரிஸ்வி சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம்



(ஐ.ஏ. காதிர் கான்)

நீர்கொழும்பு - கொச்சிக்கடையை பிறப்பிடமாகவும், மினுவாங்கொடையை வசிப்பிடமாகவும் கொண்ட எம்.ஆர். மொஹொமட் ரிஸ்வி, உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் முன்னிலையில், வியாழக்கிழமை சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், மிகவும் ஆளுமை மிக்க நீதிமன்ற உரை மொழி பெயர்ப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்பு - அல் ஹிலால் மத்திய கல்லூ ரி மற்றும் நீர்கொழும்பு லொயோலா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

இவர், நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த மர்ஹூம் மொஹமட் ரிஷாத் - சித்தி ஜெஸீமா தம்பதியினரின் புதல்வருமாவார்.

# மாவனல்லை தனாகம அஹதிய்யா பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு








(பாரா தாஹீர்)

மாவனல்லை தனாகம அஹதிய்யா பாடசாலையின் கலாச்சார நிகழ்வுக்கான பரிசளிப்பு நிகழ்வும், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும், மாவனல்லை இல்மா மண்டபத்தில் அதன் அதிபரும்,ஆயிஷா சித்தீக்கா கல்லூரி விரிவுரையாளருமான அஷ்சேக் எம். எஸ். எம். நியாஸ் கபூரி அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸட். ஏ.எம் .பைசல் அவர்களும்,கௌரவ அதிதிகளாக கேகாலை மாவட்ட அஹதிய்யா சம்மேளன தலைவர் எம். ஜே.எம். அக்ரம் ஜுனைத் அவர்களும் அதன் செயலாளர் லியாஉர்ரஹ்மான் அவர்களும்,பங்குபற்றியதோடு,அத திகளாக தனாகம பாடசாலை அதிபர் பி.எல். நிஸா அவர்களும் இப்பகுதியின் பாடசாலை அதிபர்கள்,மற்றும் அஹதிய்யா பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள்,பள்ளி வாசல் தலைவர்கள் பெற்றோர்கள் , நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றதோடு அஹதிய்யா பாடசாலையில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதோடு கற்பித்த ஆசிரியர்களும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## டயானாவின்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதவியில் இருந்து விலகி உள்ளார். அந்த பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப்பட்டார். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி டயனாவால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியல்ல என்றும் டயனாவால் எந்தவிதமான உரிமையும் கோர முடியாது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

அது தொடர்பாக டயனா கமகே அவரது பதவி பறிபோன தினத்தன்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு பேசுகையில் சமகி ஜனபலவேகயவின் 53 உறுப்பினர்களதும் தலைகளை கொய்து எடுக்கிறேன் என்றும் எதிர்க்கட்சிக்கு ஓட இடமிருக்காது என்றும் வீராப்பு பேசினார். அத்துடன் 2024.05.09 ஆம் திகதி நடத்திய செய்தியாளர் மாநாட்டிலும் சஜித் பிரேமதாசாவையும் அதன் உறுப்பினர்களையும் கடுமையாக சாடினார். அத்துடன் டயனாவுக்கு எதிரான உயர் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மேன்முறையீடு செய்ய சந்தர்ப்பம் இருக்குமானால் அதற்கான சந்தர்ப்பம் பற்றி ஆராய்வதாகவும் சவால் விட்டார். அவ்வாறே 2024.05.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசிய ஆளும் கட்சி தரப்பு அமைச்சர்களும் சில உறுப்பினர்களும் டயனாவால் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் கதை முடிந்துவிட்டது என்றும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இருந்தாலும் டயனா ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக எவ்வாறு தெரிவானார் என்று கேட்டால் அவர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளமை தெரிவந்திருக்கின்றது. தேர்தல் ஆணைக்குழுவுக்கும் டயனாவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் சமர்ப்பித்துள்ள போதும் அதுபற்றி தேடிப்பார்க்கும் அவசியம் ஏற்படவில்லை என்றும் அவ்வாறு தேடிப்பார்க்க வேண்டும் என்று சட்டங்கள் பரிந்துரை செய்யவில்லை என்றும் முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த விஜேசேகர தெரிவிக்கின்றார். எதுவானாலும் டயனா கமகே கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மோசடியான முறையில் இலங்கை பிரசை அல்லாதவராக இருந்து பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் வரப்பிரசாதங்களை அனுபவித்துள்ளார். அத்துடன் தற்போதைய நிலையில் அவருக்கு வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

குடிவரவு குடியகழ்வு சட்டங்களை மீறினார் என்ற குற்றச்சாட்டில் டயனா கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளியாக காணப்பட்டால் இதுவரையில் இலங்கை வாழ் வரிசெலுத்தும் மக்களது வரியால் அவரால் அனுபவித்த சகலவிதமான சுகபோகங்களுக்கும் நஷ்டஈடு செலுத்தும் நிலை ஏற்படலாம். எதுவானாலும் டயனா பதவிளை துறந்தாலும் அதனால் பிரதான எதிர்க்கட்சியை எதுவும் செய்ய முடியாது. டயனா ஏற்கனவே அக்கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டு கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டவராவார். இவ்வாறு பாராளுமன்ற உறுப்புரிமை இழந்த இரண்டாவது நபர் டயனா ஆவார். ஏற்கனவே கட்சி கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளை மீறினார் என்ற காரணத்தால் உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் முன்னாள் அமைச்சராக இருந்த ஹாபிஸ் நசீர் அஹமதின் பதவியும் பறிபோனமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் நடத்தப்படலாம் என்றும் அதற்கு முன்னர் உாயி காலத்தில் தேர்தலுக்கான வேட்பு மனுக்கல் கோரப்படுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றது என்ற அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு 2024.05.09 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கின்றது. இந்நிலையில் இதற்கிடையில் நிலைமைகள் மாற்றமடைந்து பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமா என்ற சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றது.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதாக இருந்தால் பாராளு மன்றத்தை கலைக்குமாறு அரசியல் அமைப்பு ஏற்பாடுகளுக்கமைவாக பாராளு மன்றத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் மாத்திரம் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரங்களின் அடிப்படையில் அதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆனாலும் அண்மையில் பொதுஜன பெரமுண கட்சியின் ஸ்தாபகர் பெசில் ராஜபக்ஷ வுடன் நடைபெற்ற 05 ஆவது சுற்று சந்திப்பின் போது பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்றும் உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பதை திட்டவட்டமாக ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார்.




பயாஸா பாஸில்

## உங்களுக்கு மிகப் பிடித்தமான புகைப்படம் எது..?

இவ்வாறு ஒரு கேள்வியை யாராவது ஒருவர் உங்களிடம் கேட்டால்.....

அதற்கான பதில் என்னவாக இருக்கும்..??

உலகத்தில் உள்ள அத்தனை அழகான விடயங்களையும் தேடி எடுப்பீர்கள். எதை கூறுவது என்று சிந்திப்பீர்கள். இன்னும் அழகான மனிதர்கள் , நடிகர்கள் , நடிகைகள் இன்னும் உங்களுக்கு பிடித்தமான யாராவது நபர்களின் படங்களை தேடித்தீப்பீர்கள்...

உண்மையில்.,

அது உங்கள் மனதிற்கு திருப்தி அளிக்கின்றதா...??

ஏன்.. அதற்கான விடை நீங்களாக உங்கள் முகமாக இருக்க முடியாது...?!

ஆம், நிச்சயமாக உங்களுக்கு பிடித்தமான புகைப்படம் நீங்களாக மட்டுமே இருக்க முடியும். இருக்க வேண்டும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.. உங்கள் முகத்தில் இரண்டு கண்கள் , ஒரு மூக்கு , வாய் இரண்டு காதுகள், நெற்றி தலைமுடி எல்லாம் இருக்கின்றன. இவை அனைத்தும் வெறும் உறுப்புகள் அல்ல மிகவும் அற்புதம் வாய்ந்த புலன்கள்.

அவற்றால் செய்யக்கூடிய தொழிற்பாடுகள் என்னென்னவாக இருக்கும் என்பதை நீங்களே அறிந்து வைத்திருப்பீர்கள். கண்கள் பார்வையை அழகாக்கி தருகின்றது. மூக்கு நுகர்வதற்கும் சுவாசிப்பதற்கும் உதவி செய்கின்றது. வாய் பேசுவதற்கும் சாப்பிடுவதற்கும் அமைந்திருக்கின்றது. அதே போல் காதுகள் கேள்வி ஞானத்தை தருகின்றது. அன்பானவர்களின் முத்தத்தை பதித்திட நெற்றி, தலைகோதி, தலை சீவி விட தலைமுடி.

இவ்வாறெல்லாம் அமைந்திருப்பது உங்களுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லையா? அவ்வாறெல்லாம் பல அற்புதமான விடயங்களை உள்ளடக்கிய ஒரு முகம் உங்களிடம் இருக்கும் போது முகம் மட்டுமல்ல உடலின் மொத்த பாகங்களும் ஆரோக்கியமாக உங்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கும்போது உங்களுக்கு மிகப் பிடித்தமான புகைப்படம் ஏன் உங்களுடையதாக இருக்க முடியாது...?? நிச்சயமாக உங்களை நீங்களே காதலித்துப் பாருங்கள். விரும்பிப் பாருங்கள். நிச்சயம் இந்த உலகம் அழகு பெறும்.. நீங்களும் அழகு பெறுவீர்கள்..

# ஒரே ஒருமுறை தோற்றுப் பாருங்கள்

வாழ்க்கையில் எப்போதாவது, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது ஒரு போட்டியில் தோல்வியை தழுவிய நினைவுகள் உண்டா....?? வெற்றி மட்டும் தான் வாழ்க்கையா..?

இல்லை. இல்லவே இல்லை. ஒரே ஒருமுறை தோல்வியை சந்தித்துப் பாருங்கள். நீங்கள் யார்.., என்பதை ஏதோ கற்றுக் கொண்டிருக்கின்றீர்கள்...

சரி., இனி தோல்வியைப் பற்றி சிறிது கற்றுக் கொள்வோமா..? எல்லாம் முடிந்து விட்டது. அவ்வளவுதான்... இனியும் நடக்கப்போவது என்ன... ?

ஏன் வாழ்கிறோம்...? என்ற பல விதமான வசனங்களை கேட்டு இருப்போம்.



உங்களுக்கே நன்றாக தெரியும்.

கோபம் , விரக்தி என்பன கோரத்தாண்டவம் ஆடுமா..? இல்லை, பொறுமையும் புன்னகையும் தவழுமா..?

முதல் தெரிவு எனின், நீங்கள் தோல்வியைப் பற்றி சரியாக புரிந்து கொள்ளவில்லை. இரண்டாவது தெரிவு எனின், தோல்வியின் மூலம் நீங்கள் உண்மையில், எதிர்மறையான வாசகங்களே...

தோல்வி என்பது, எல்லாம் முடிந்து விட்டது என்று நினைப்பதல்ல. அதுவே ஆரம்பம். அது ஒரு பகுதி. வெற்றிக்கான அடித்தளம்.

வெற்றியைப் பற்றி பிடிக்கும் ஆதாரமாக தோல்வி இருந்து கொண்டிருக்கின்றது. நாம் தோல்வியை தழுவியதன் மூலமாகத்தான் வெற்றிக்குரிய அடையாளங்களை எமக்கு கண்டுகொள்ள முடியும். அதன் நுணுக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும். அனுபவங்களை கற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு முறையும் வெற்றிகளை அடுக்கிக் கொண்டே போனால் வாழ்வில் சுவாரஷ்யம் இருக்காது. தோல்வியை தழுவி , அதன் மூலம் கற்று , தன்னம்பிக்கை வளர்த்து , முன்னேறி , போராடி வெற்றியை பெற்றோமாயின் நிச்சயம் எம் வாழ்வு ஜெயிக்கும்.

என்ன ....

ஒரு முறை தோற்றுப் பார்ப்போமா...!!??



அரபாத் பஹுர்தீன்



# சர்வதேச கிரிக்கெட்டிற்கு விடைகொடுக்கிறார் ஜேம்ஸ் அண்டர்சன்!

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் வலதுகை வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

41 வயதான இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் கடந்த 2002ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டிலும், 2003ஆம் ஆண்டு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலும் அறிமுகம் பெற்று, கடந்த 2015 ஆம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட்டுக்கு விடை கொடுத்தார். இருப்பினும் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் மட்டும் பங்கேற்று வந்தார். இதுவரையில் 187 சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள அண்டர்சன் 700 விக்கெட்டுகளை அள்ளிச் சுருட்டியுள்ளார்.

இந்நிலையில் சர்வதேச ரி20 உலகக்கிண்ண தொடருக்குப் பின்னர் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரின் முதல் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிற்கு விடை கொடுக்கப் போவதாக நேற்று (11) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அண்டர்சன் குறிப்பிடுகையில்,

லார்ட்ஸில் நடக்கும் கோடையின் முதல் டெஸ்ட் எனது கடைசி டெஸ்ட் என்று சொல்ல கவலையாக உள்ளது.

என் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய நம்பமுடியாத 20 வருடங்கள், நான் சிறுவயதில் இருந்தே நான் விரும்பிய விளையாட்டை விளையாடுகிறேன். நான் அடைந்ததைப் போலவே இளம் வீரர்கள் தங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு வழி கொடுக்க வேண்டும்.

அத்துடன் என் குடும்பத்தவர்களுக்கு மிகப்பெரிய நன்றி. மேலும், இதை உலகின் சிறந்த பணியாக மாற்றிய வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நன்றி. பல ஆண்டுகளாக என்னை ஆதரித்த அனைவருக்கும் நன்றி." என்றார் ஜேம்ஸ் அண்டர்சன்.




# பி.எஸ்.ஜி இல் இருந்து மெட்ரிட்டிற்கு செல்லும் எம்பாப்பே

பிரான்ஸ் நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரரான கிலியான் எம்பாப்பே தற்சமயம் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்திலிருந்து விலகி முன்னர் விளையாடிய ஸ்பெய்னின் ரியல் மெட்ரிட் கழகத்தில் விளையாடப் போவதாக அறிவித்துள்ளார்.

25 வயதான எம்பாப்பே கழக மாற்றம் தொடர்பில் குறிப்பிடுகையில், " ஜூன் மாதத்துடன் முடிவடையும் லீக்-1 சீசனோடு பி.எஸ்.ஜி கழகத்தில் இருந்து வெளியேற உள்ளேன். வரும் ஞாயிற்றுக்கிழமை (இன்று) விளையாடுவது பி.எஸ்.ஜி அணிக்காக தனது கடைசி ஆட்டம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிலியான் எம்பாப்பே பி.எஸ்.ஜி அணிக்காக இதுவரை 305 போட்டிகளில் விளையாடி 255 கோல்களை அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் லீக் உதைப்பந்தாட்டத் தொடர்: இறுதியில் ரியல் மெட்ரிட்டை எதிர்கொள்ளும் டொட்மென்ட்




நடப்பாண்டின் சம்பியன் லீக் உதைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் பான்முனிச் கழகத்தை வீழ்த்திய ரியல் மெட்ரிட் கழகம் இறுதிப்போட்டியில் டொட்மென்ட் கழகத்தை எதிர்த்தாடவுள்ளது.

உலகப் புகழ்பெற்ற உலகின் 32 உதைப்பந்தாட்ட கழகங்கள் மோதுகின்ற சம்பியன் லீக் உதைப்பந்தாட்டத் தொடரில் 4 கழகங்கள் வீதம் 8 குழுக்காலாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று குழு நிலை லீக் ஆட்டங்கள் இடம்பெற்றன. பின்னர் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பிடித்த கழகங்கள் சுப்பர் 16 சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்க அச் சுற்று விலகல் சுற்றாக இடம்பெற்றது. பின்னர் அதிலிருந்து 8 கழகங்கள் காலிறுதிக்குத் தெரிவாகி, பின்னர் அதலிருந்து 4 கழகங்கள் அரையிறுதிக்குத் தகுதி பெற்று பின்னர் 2அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய ரியல் மெட்ரிட் கழகம் குழு நிலைப் போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்று சுப்பர் 16 சுற்றில் ஆ.பி. லெய்ப்ஷிங் கழகத்தை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. பின்னர் காலிறுதிப் போட்டியில் பலமிக்க மென்செஸ்டர் சிட்டி கழகத்தை போராடி வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

அந்தவகையில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியின் முதல் லெக் ஆட்டத்தில் ரியல் மெட்ரிட் கழகம் பயன் முனிச் கழகத்துடனான ஆட்டத்தை 2:2 என சமன் செய்தது. இந்நிலையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற தீர்மானமிக்க 2ஆவது லெக் ஆட்டத்தில் இவ்விரு கழகங்களும் பலப்பரீட்சை நடாத்தின. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு கழகங்களும் கோல்களை உட்செலுத்தாமல் போக 2ஆவது பாதி ஆட்டத்தின் 68ஆவது நிமிடத்தில் பயன் முனிச் கழகம் முதல் கோலை போட்டு முன்னலை பெற்றது.

இருப்பினும் ஆட்டத்தின் இறுதி நிமிடங்களான 88 மற்றும் 91 ஆவது நிமிடங்களில் ஜொஸிலு இரு கோல்களை உட்செலுத்த விறுவிறுப்பான ஆட்டத்தில் 2:1 என ரியல் மெட்ரிட் கழகம் வெற்றி பெற்றதுடன் ஒட்டு மொத்தமாக 4:3 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று அசத்தியது.

அதற்கமைய முதல் அரையிறுதிப் போட்டியில் பி.எஸ்.ஜி கழகத்தை 2:0 என வீழ்த்திய டொட்மென்ட் கழகம் எதிர்வரும் ஜ/ன் 2ஆம் திகதி பலமிக்க ரியல் மெட்ரிட் கழகத்தை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெலிப்பன்ன ரஹ்மானியாவில் கமர் இல்லம் சம்பியன்



(பீ.எம்.முக்தார்)

வெலிப்பன்னை ரஹ்மானிய்யா மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா அதிபர் முஹம்மத் நவ்மான் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கமர், சம்ஸ், நஜூம் ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் இடம் பெற்றதோடு 329 புள்ளிகளை பெற்று கமர் இல்லம் 2024 ஆம் ஆண்டுக்கான சாம்பியன் இல்லமாக தெரிவானது.சம்ஸ் இல்லம் 328 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தையும் மற்றும் நஜூம் இல்லம் 268 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ரூமி ஹாஷிம் கல்வி மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான டாக்டர் எம்.எச். எம்.ரூமி ஹாஷிம் பிரதம அதிதியாகவும் மகீஸா பவுண்டேஷன் இணைப்பாளர் தேசமான்ய அப்துல் காதர்,ரூமி ஹாஷிம் கல்வி நிலைய செயலாளர் ஜெஸூக் அஹமட்,முன்னாள் அதிபர் எம்.கௌஸூல் அமீர் உட்பட கல்வி அதிகாரிகள்,ஊர் பிரமுகர்கள்,பாடசாலை அபிவிருத்தி சங்க,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,பெற்றோர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கமர் இல்லத்தின் கெப்டன் எம்.எச்.எம்.ஸாதிக் செம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிப்பன்னை ரஹ்மானியா முஸ்லிம் மகா வித்யாலயம் கல்வி,விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளில் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து அதிதிகள் இங்கு பெரிதும் பாராட்டினர்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்காக தன்னால் செய்ய முடியுமான அனைத்து உதவிகளையும் செய்வதாக பிரதம அதிதி டாக்டர் ரூமி ஹாஷிம் குறிப்பிட்டார்.

ரூமி ஹாசிம் கல்வி நிலையத்தினூடாக பாரிய கல்விப் பணிகளை மேற்கொள்ளும் அதன் ஸ்தாசகரையும் விழாவில் பங்கு பற்றிய அதிதிகள் பெரிதும் பாராட்டினர்.

மேற்படி கல்வி நிலையத்தினூடாக இப்படசாலையில் பிரத்தியேக இலவச வகுப்புகளும் இடம் பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.